உ

சிவமயம்.

யாழ்ப்பாண

# உத்தியோகர்லக்ஷணக் கும்மி.

இது

கொக்குவில் கிழக்கு

M. S. துரை அவர்களால்

ஷெ யூர்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

2-ம் பதிப்பு.

1936. விலை ரு. 1-00.

கடவுள் துணை

# பாயிரம்.

## அகவல்.

சீர்செறி இலங்கையைச் சேர்ந்தயாழ்ப்பாண
வூரரசாண்ட வுயர்மன்னர்தம்மிற்
பரராசசேகரன் புவனேகவாகுவாந்
தமிழ்ராசர்செய்த தலவிசேஷங்களும்
சிவதலமகிமையும் சிவனடியார்க்கெலாங்
குறைவறநன்மை கொடுத்தபரிசும்
பறங்கியுலாந்தெனும் பாவிகளாலே
றம்பெறுதலமெலாஞ் சிதைபட்டவாறும்
ங்கிலமன்னரி லாதியில்வந்த
தீங்கிலாமோயாட் லேயாட்டென்பவர்
தம்முயிர்போலித் தரணியில்மருவிய
ன்னுயிரனைத்தையும் வளர்த்ததன்மையும்
வாலயதன்மஞ் சிறப்புற்றோங்கப்
ராமுகமின்றிப் பரிவுகள்செய்ததூஉம்
றைஸ்டயிக்கெனும் பெருந்தகைமாருங்
றைவிலாநல்ல குணமுடைமேலோர்
பொறுமைதெளிவு புனிதவாசார
மறுவிலாவாய்மை மாசறல்ஞானம்
புவிநரரிடரைப் போக்கியபுகழ்புரி
யறிவுடையோரொன் றனைவரும்விரும்பினர்
ளவுவஞ்சனைசெய் கள்வரையெல்லாந்
தெளிவுறுபயிரின் களையெனக்களைந்தனர்
ண்ணுமெழுத்து மின்புறப்படித்து
ன்முகமாக நடுநிலையுணர்ந்தவர்
திரமதிசேர் தருந்தலைக்குரிய
திராவாய்மை வழுவற நிகழ்த்தினர்
த்திரமாகப் பிள்ளைகள்படிக்கச்

சாத்திரக்கல்விச் சாலையும்வகுத்தனர்
சீவகோடிகளெலாஞ் சிறப்புடன்வாழ
வேர்பெறுவயித்திய சாலையியற்றினர்
கோடிதன்மங்கள் குடிபதியெவருங்
கேடிலாதுய்யக் கிருபைகள்செய்தனர்
சைவவொழுங்கு சமயவிதிப்படி
செய்யத்தகுந்த சிறப்பெலாஞ்செய்தனர்
கீழுத்தியோகருங் கெடுதல்செய்யாமல்
நாளுக்குநாள்வற் புறுத்திநடந்தனர்
கண்போற்குடிகளைக் காக்கும்பொருட்டு
அன்பேயுருக்கொண் டவனியில்வந்தவர்
பின்வந்தகிப்சன் போல்மறையிவரின்
நன்மையையூரவர் நன்குமதித்தனர்
நசல்துரையி னிதயநன்மைகளும்
தருமகுணமும் தகுதியும்தயையும்
சற்றுக்கோட்டில் துரைத்தனஞ்செய்த
மற்றுந்துரைமார் மதிவல்லபங்களும்
மோவியுந்தவான் மோசவந்தியும்
கேவலபுத்தியும் கீழோருறவும்
பொய்ச்சாதனத்தைப் போற்றிநடத்திய
மெய்ச்சார்பிலாத வீண்துரைத்தனமும்
மேலோர்மதியை விழலெனத்தள்ளிக்
கூலைப்பெரிதெனக் கொண்டபழுதும்
மரணசாதன மாய்கைபுரிந்துகூல்
விருதாவாகச் சிறையிலிருந்ததூஉம்
ரோசைமலைக்கொக் குண்மையும்ராச
நீதிவழுவா நெறியிலொழுகலும்
சரந்துரைஉவாதிங்றன் தம்மனச்சாட்சிக்
கிணங்கவழக்கெலா மினிதுவிளக்கினர்
ஆதியிற்கள்ளச் சாதனமெழுதி
யதனைக்காட்டி யீடுமெழுதிக்
கோட்டில்துரந்து வீட்டாலெழுப்பிய
கொடியபாதகர் கடியபடிறும்
கோடுவழக்கை யாடுந்தாணிமார்

கேடுநன்மையும் கீர்த்தியும்புன்மையும்
நிலந்தனையளந்து நேர்வழிசெய்யும்
உலாந்தாமாரி லுண்மையும்பழுதும்
தானியமெல்லாஞ் சூனியமாக
மானுடர்மேனி வாடித்திரிவதூஉம்
கெட்டவரான கீழ்மக்கள் துட்டர்
மட்டுக்குமிஞ்சிய மமதைபேசுவதும்
தேசஅதிபதி சீர்புகழ்செப்பக்
கூடியசபையில் குழப்பமெழுந்ததூஉம்
சைவமுறைமையும் சைவநூலுணர்ச்சியும்
மெய்யடியார்தம் விதிவழியொழுகலும்
தெய்வம்சிவமெனும் சித்தத்தெளிவும்
ஐயப்படாநல் லறத்துறுப்புடைமையும்
பூதமுதலாய்ப் பொருந்தியநாத
பேதமுமுணர்ந்த பேரறிவாளன்
புகைரதவீதியிப் பதிவரவிடுதல்
சரியோவென்பது தானறிபொருட்டு
இவ்விடம்வந்து இராமநாதத்துரை
செய்தநன்மையும் செவ்வையும்சிறப்பும்
ஊரவர்செய்த வுபசாரங்களும்
நீதிசேரரச னநீதிகள்சொற்றதூஉம்
றுவைனந்துரைசொற் சோர்வுந்தாழ்வு
மவர்கீழ்த்தலைமைமா ரன்பிலாச்செய்கையும்
குடிகளைவருத்துங் குணமும்பழுதும்
கடமையறவிடுங் கடுமையுங்கொடுமையும்
மணியமுடையார் மற்றுநொத்தாரிஸ்
இவர்களியல்பு மின்பதுன்பங்களும்
பாரில்வேளாண்மை பழுதுபடும்படி
யேரைப்பிடித்துக் காசுபறித்தனர்
தருமவிருத்தியில் தளர்வுசெய்வோரைத்
தெரியவறிந்தும் தெண்டியாதிருந்தனர்
ஈடுபேசாம லெவர்க்கும்பொதுவாங்
காடுசேர்விறகைக் கடமையில்வைத்தனர்
மாடுகள்தின்று மலசலங்கழிக்கும்

தார்செறிகுழைக்குத் தான்வரிவைத்தனர்
தலைவரிப்பணத்தில் தயாவிர்த்தியின்றிக்
கிழவரைக்கூடக் கிட்டிகட்டினர்
ஆயத்துறையி லேவல்செய்வோர்சிலர்
நியாயத்தவறு நடத்திப்பறித்தனர்
வியாபாரிசோனக ரித்துறைமுகத்தினிச்
சாமான்வருத்தாத சபதமுஞ்செய்தனர்
ஊரிற்றலைமைமா ருண்மைமறுத்துக்
காசுக்கேற்கக் கடமைகள்செய்தனர்
பொலிசுகளால்வரும் பொய்யும்புரளியும்
அலைதல்முதலா மவமானங்களும்
எளியோர்தம்மைப் பெரியோர்வருத்தல்
சரியோவெனத்துரை தானுணராததூஉம்
ஜூபிலியால்வெகு தொல்லையடைந்து
பாலர்கள்வாணம் பட்டிறந்ததுவும்
கட்டுக்கோப்புக் கடைகள்விழுந்து
எட்டுப்பத்துச் சனங்களிறந்ததூஉம்
மழையின்கொடுமையின் மனிதர்வறுமையும்
அறம்வளராமையு மாகறவாமையும்
அரசர்செங்கோலின் பழுதெனமுன்னோர்
பலமுகமாகப் பாடிப்படித்தனர்
"கொடுங்கோல்மன்னன் வாழுநாட்டிற்
கடும்புலிவாழுங் காடுநன்றாம்"
"சான்றோரில்லாத் தொல்பதியிருத்தலிற்
றேன்றேர்குறவர் தேயநன்றாம்"
இக்காலத்திற் கொடுமையும்பழுது
மெக்காலத்து மில்லாதபாவம்
மணப்புரிமன்னவர் மாட்சிமையெல்லாம்
குணஞ்செறிலட்சணக் கும்மிதான்சொலுமே.

முற்றிற்று.

யாழ்ப்பாண

# உத்தியோகர்லக்ஷணக்கும்மி.

## மோயாட், லேயாட் காலம்.

### விருத்தம்.

அரசியல் புரிந்திவ் வூரை
யாண்டமன் னவர்கள் தம்மிற்
பெரியவர் மோயாட் லேயாட்
பெட்புடன் குடிகள் வாழ
வரிமிகக் குறைவு செய்து
வஞ்சரை யடக்கிக் காத்த
உரிமையு மூர்க்குச் செய்த
வுதவியு முரைக்க லுற்றேன்.

### கும்மி.

சீர்மேவு யாழ்ப்பாண தேச அரசர்
சிறப்பு மவரேவல் செய்வோர் சிறப்பும்
பார்மீது லக்ஷணக் கும்மிசொல்ல வுமை
பாலன் விநாயகன் காப்பாமே. (க)

ஆதி பராபரன் றன்னருளா லிந்த
யம்புவி யாண்ட வரசர்களின்
நீதி யநீதியும் செங்கோற் சிறப்பும்
நிரையாகக் கேளடி ஞானப்பெண்ணே. (உ)

முப்பத்து மூன்று வருஷப் பரீக்ஷையும்
மூத்தவர் பேசிய வார்த்தையாற் கேள்வியும்
சத்தியமாம் நீதிசாரமுங் கொண்டிது
சாற்றத் துணிந்தேன்நான் ஞானப்பெண்ணே. (ங)

கற்றறி வில்லாத பேதைசொல் பாடலிற்
குற்றந் தெரிவாரோ கற்றவர்கள்
பெற்ற பிதாமாதா பிள்ளை மழலைபோல்
சித்தம் மகிழ்வார்கள் ஞானப்பெண்ணே. (ச)

குடிக ளுயர்ந்தால் முடியுயரும் நல்ல
குணமான செங்கோல் செலுத்தவேண்டும்
கடிய வரியு மநியாயமுஞ் செய்தால்
கொடிய வரசாகும் ஞானப்பெண்ணே. (௫)

குற்றந் தடையின்றிக் கண்டறிந்து அந்தக்
குறைதீரத் தண்டனை செய்யவேண்டும்
மெத்தக் கொடுமை யுடைய வரசனை
விட்டுத் தனியடி ஞானப்பெண்ணே. (௬)

நாட்டிற் குடிசனம் வாழ்த்தவேண்டு மென்றும்
நன்மனசா யரசாள வேண்டும்
கேட்டின் வழிநின் றநியாயஞ் செய்வது
கேடல்லவோ சொல்லு ஞானப்பெண்ணே. (௭)

அஞ்சாமை யீகை யறிவூக்கங் கொண்டோரை
யாளுவோன் ராசாதி ராசனடி
கெஞ்சுங் குடிக ளிடத்திற் பறித்துண்ணுங்
கீழ்மகன் ராசனோ ஞானப்பெண்ணே. (௮)

கோப முடையவன் ராசனல்லக் குடி
குற்றஞ் சாதிப்பவன் ராசனல்ல
தீயாரைக் கண்டித்து நல்லோரை ரக்ஷித்தல்
சிறந்த வரசல்லோ ஞானப்பெண்ணே. (௯)

தானென்று யாரையுங் காணவேண்டும் நல்ல
தன்மையுடன் நீதி செய்யவேண்டும்
பாரிற் சிலசாதி தன்னை வளர்ப்பது
பழுதல்லவோ சொல்லு ஞானப்பெண்ணே. (௧௦)

நாடோறு நாடி முறைமை செய்யாவிடின்
நாடோறு நாடு கெடுமென் றறியாத
பேயரசன் வாழும் நாட்டி லிருப்பது
பாபமல்லோ சொல்லு ஞானப்பெண்ணே. (௧௧)

உயிரிற் சிறந்த சினேகித ராகிலு
முண்மையான குற்றங் கண்டதுண்டேல்
அவரவர்க்குத் தக்க தண்டனை செய்வ
தரச னொழுங்கன்றோ ஞானப்பெண்ணே. (௧௨)

ஆங்காரங் கோப மபிமான மாசை
யான குணமுள்ள ராசனுக்கு
நீங்குமோ பாபமும் செங்கோல் நிலைக்குமோ
நிச்சயம் பேசடி ஞானப்பெண்ணே. (கங)

சிங்கை யாரியச் சக்கிர வர்த்தியின்
மந்திரி யாமிரு பேர்கள்வந்து
சங்கை யான வரசுசெய் தாரென்று
எங்கள்முன் னோர்சொன்னார் ஞானப்பெண்ணே. (கச)

ஆயிரத் திருநூறு மாண்டின் பின்னாக
வனேக தமிழ்ராச ராண்டுவந்தார்
பார்வைதருங் கட்டுக் கோப்புச் சிவாலயம்
பலபணி செய்தாராம் ஞானப்பெண்ணே. (கரு)

சிட்டர் தொழும்படி கட்டிவைத்தாரவர்
சட்டநாதன் கோயில் தான்முதலாய்
அட்ட திசையிலும் வேறு சிவஸ்தல
மவரால் வழங்கிற்றாம் ஞானப்பெண்ணே. (கசு)

நல்லூர்த் தலமந்தக் கந்தசாமி கோயில்
நல்ல புவனேக வாகுமன்னன்
நல்ல தினத்தில் வகுத்ததென்று பலர்
சொல்ல வறிந்தேன்நான் ஞானப்பெண்ணே. (கஎ)

அந்தத் தலம்போலே பத்திமுத்தி சித்தி
யெந்தத் தலத்திலும் கண்டதுண்டோ
சிந்தை தெளிந்த மகான்கள் முதலாய்த்
தெரிசனை காணுவார் ஞானப்பெண்ணே. (கஅ)

ஆயிரத் தறுநூற்றுப் பதினைந்தா மாண்டினி
லவரைச் செயித்தார் பறங்கிக்காரர்
தோயு மறுநூற்று ஐம்பத்தெட்டா மாண்டு
துரத்தினார் டச்சுக்கள் ஞானப்பெண்ணே. (ககூ)

ஆயிரத் தறுநூற்று இருபத்து நாலினி
லந்தப் பறங்கிகள் யாழ்ப்பாணக் கோட்டையைச்
சீருடன் கட்டியே முப்பத்திரண்டினிற்
சிறப்பாய் முடித்தாராம் ஞானப்பெண்ணே. (உ0)

ஊர்கள்முப் பத்திரு பற்றாய் வகுத்தனர்
ஒவ்வொரு பற்றிலுங் கோவில்கள் கட்டினர்
ஆறு மறியவே தோம்பு மெழுதி
யழகு செய்தாரவர் ஞானப்பெண்ணே. (௨௧)

பொல்லாத சாதி பறங்கி டச்சுநல்ல
போதஞ்சேர் கல்வி யறிவுசொற்பம்
சொல்ல முடியாக் கொடுமை யுடனே
துரைத்தனஞ் செய்தாராம் ஞானப்பெண்ணே. (௨௨)

உத்தி யோகமுறை நான்சொல்லக் கேளடி
ஒப்புக் கணக்கரும் சின்னக் கணக்கரும்
மற்று மதிகாரம் தொம்போகித ரின்னும்
மகாதிசை யுள்ளவர் ஞானப்பெண்ணே. (௨௩)

இவ்வண்ணம் பற்பல வேலை நிரூபித்து
ஏழைச் சனத்துக்குச் சோலி வருவித்து
ஐயோ வெவரும் பயந்து வருந்தவே
அரசு செய்தாரவர் ஞானப்பெண்ணே. (௨௪)

மார்க்க வழிபாடு சற்றுமில்லை யப்போ
மனிதர் தலைமே லுறுமா வில்லை
பார்க்க முடியாக் கொடுமையுட னிந்தப்
பாராண்டு வந்தனர் ஞானப்பெண்ணே. (௨௫)

ஒவ்வோர் புருஷர்க்கும் தங்கள்பேர் சூட்டினர்
உயர்சிவ பக்தி செய்யாது தடுத்தனர்
சைவர்களாலும் தொம்பிலிப் பென்றபேர்
சொன்ன தறியாயோ ஞானப்பெண்ணே. (௨௬)

கோவில் தலங்களைத் தான்சிதைத்தா ரூரில்
குடிசனங் கல்வியைத் தான்மறித்தார்
வேதனை செய்து வரிவைத்து வாங்கின
விந்தை தெரியுமோ ஞானப்பெண்ணே. (௨௭)

குத்தகை யொவ்வொன்றும் தப்பாது விற்றனர்
கூட்டிறு ரந்நாளில் புறாக் குத்தகை
மெத்தநா ளாகவே விற்றுவந்தா ரிங்கே
மீன் குத்தகையடி ஞானப்பெண்ணே. (௨௮)

தன்மார்க்க மல்லாற் பிறமதக் காரரைத்
தண்டனை செய்து சமயத்து ளாக்கினர்
கன்மார்க்க நெஞ்சர் சிலுவை தலைப்பாவில்
கட்ட விதித்தவர் ஞானப்பெண்ணே. (உகூ)

பன்றிகள் மூக்கில் வளைய மில்லாவிடில்
பலரும் பிடித்ததைத் தின்னலா மென்று
வம்பாய்ப் பலபல சட்டளை செய்த
வலுவந்தக் காரராம் ஞானப்பெண்ணே. (௩௦)

ஆரு மந்நாளையி லுத்தியோகர் தம்மை
யவசர வேலைக் கழைத்தா ராகில்
தாமத மில்லை யரிசி கறியவன்
தலைவிதி யாமடி ஞானப்பெண்ணே. (௩க)

மகாதிசை யுள்ளவர் போகவந்தால் கூட
வரும்வேலை காரர்க்குஞ் செல்லுஞ் செலவெல்லாம்
தேடிக் கொடுத்தவ் வொழுங்குபோலே யவர்
செய்ய வேண்டுமாமே ஞானப்பெண்ணே. (௩உ)

எழுபதின் மேலிரு சட்டளை செய்தனர்
ஏழைக் குடிகளுக் கெல்லா மிடறுதான்
பழுது அனேகம் நயஞ்சில வுண்டெனப்
பலர்சொல்லக் கேட்டோமே ஞானப்பெண்ணே. ()

ஆயிரத்தெழுநூற்றுத் தொண்ணூற்றைந் தாமாண்டி
லந்த வரசரை வெற்றிகொண்டு
பூங்குழலே யிந்த ஆங்கில மன்னர்
பிடித்தாளு கின்றாரே ஞானப்பெண்ணே. (௩ச)

முன்னுள்ள மன்ன ரொழுங்கு முறைகளை
முற்றுகத் தள்ளாம லங்கீகரித்தனர்
பின்னே வரவரத் தங்க ளொழுங்கைப்
பெலக்க நிறுத்தினர் ஞானப்பெண்ணே. (௩ரு)

அரச ரொழுங்கி லிவர்மிக நல்லவ
ராஞலு மிப்போ பழுது மெத்த
"வரவர மாமி கழுதைபோலே" யென்ற
பழமொழி போலாச்சே ஞானப்பெண்ணே. (௩௬)

மூன்வந்த மோயாட்டெனுமரசன் நல்ல
முக்கிய மான குலத்ததிபன்
நன்மையுந் தீமையும் பார்த்து ரக்ஷிக்கிற
நல்ல பிதாவன்றோ ஞானப்பெண்ணே. (௧௭)

மெத்தப் பெரிய சமுசாரி கல்வி
மேலான புத்தி மதிசாலி
சித்தத்திற் பக்தி சிறந்த மகானவர்
செய்தி தெரியுமோ ஞானப்பெண்ணே. (௧௮)

வண்ணை வைத்தீசுரன் கோவி லவர்
வல்லபத் தாலே சிறந்ததென்பார்
எண்ண முடியாத நன்மை யிவ்வூருக்கு
இட்டமாய்ச் செய்தாரே ஞானப்பெண்ணே. (௧௯)

ஊர்கடோறும் வெகு காவல்மால் கட்டியே
யொவ்வோ ரிரவிலும் காவல் வைப்பார்
பாரிற் களவு நடவாவகை யூரைப்
பத்திரஞ் செய்தாராம் ஞானப்பெண்ணே. (௨௦)

ஆயிரத் தெண்ணூற்று ஆறும் வருஷத்தி
லங்கங்கே யெங்கும் விதானைமார் வைத்தனர்
காரியங் கண்டு சனங்க ளெல்லாரையும்
கட்டி யாண்டாராமே ஞானப்பெண்ணே. (௨௧)

விதானைமாருக் கந்த நாளையிலே மெத்த
வெகுவரு மானமும் தத்துவமுங்கூட
பராமுக மிப்போ பொலிசுக ளாலே
பலனுங் குறைந்தது ஞானப்பெண்ணே. (௨௨)

வரிசை கொடுப்பது சாதிமானுக் கென்ற
வழமை முன்னாளி லிருந்ததடி
சிறிய மனுஷர் பெருமை கொண்டாடல்
அருமையல்லோ சொல்லு ஞானப்பெண்ணே. (௨௩)

மேள மடிக்க முடியாது வீட்டில்
மேற்கட்டி கட்டவுங் கூடாது
ஆளும் பணங்கா சிருந்தாலுந் துரை
யாக்குத்து வேண்டுமாம் ஞானப்பெண்ணே. (௨௪)

என்ன வரிசைக்கு மொப்பம் பெறவேண்டு
மென்ற வழமை முன்னுண்டுதானே
பின்னிவ் வொழுங்கை யழிக்கவந்த வகை
யென்னவிதஞ் சொல்லு ஞானப்பெண்ணே. (௪௫)

சாதிகள் தத்தம் முறையிற் பிறழாமல்
தண்டனை செய்தூரைப் பண்டுபோல் வைத்தனர்
வேதியர் வேளாளர் செட்டிமார்க் கப்போ
வெகுமரி யாதையாம் ஞானப்பெண்ணே. (௪௬)

எளிய சனமும் பறையர் நளவரு
மேகமா யெங்குந் திரியமாட்டார்
உலகி லுயர்ந்த மனுஷரைக் கண்டா
லொதுங்கி நடப்பார்கள் ஞானப்பெண்ணே. (௪௭)

பகற்காலந் தன்னில் துரும்பர் சகலரும்
பாதைவழி கொண்டு போகமாட்டார்
இராக்கால மூரா ரொடுங்கின பின்னவ
ரெங்குந் திரிவாராம் ஞானப்பெண்ணே (௪௮)

ஏழைச் சனத்துக்குக் காசைக் கொடுத்து
எடுத்துச் சிறையாய் வளர்த்துவந்தார்
ஆளடிமை கொள்ள லாகா தென்றுபின்
னழித்துப் போட்டாரடி ஞானப்பெண்ணே. (௪௯)

ஆயிரத் தெண்ணூற்றுப் பன்னிரு யாண்டிலே
யரசன் மோயாட்டும் சிலாபந் குளிப்பித்தார்
மாயிரு ஞாலத்தி லுள்ள சனங்கள்
மகிழ நடந்தாராம் ஞானப்பெண்ணே. (௫0)

கோபாலச் செட்டியார் இரண்டுமூன்று யாண்டு
குத்தகை தோணியாய் வாங்கிக் குளிப்பித்தார்
மாமூலமாம் ௰ரைக் காயர் புறமும்
மகிழ்வாய்க் குளிப்பித்தார் ஞானப்பெண்ணே. (௫௧)

அந்நாளிற் குத்தகை வாங்கின பேர்க
ளதிக நயமும் பெருமையும் பெற்றார்கள்
இந்நாளிற் குத்தகை வாங்க மனுஷ
ரிருக்கிறரோ சொல்லு ஞானப்பெண்ணே. (௫௧)

மனுஷ ரிருந்தாலும் துரைமார் குணங்களை
மனதி லறிந்து பயப்படுகின்றார்கள்
இவர்காளில் வைத்த சிலாபத்திற் போனவ
ரெவர்தப்பினார் சொல்லு ஞானப்பெண்ணே. (௫௩)

ஜான்டேச லென்னும் பதிதனக்கு அப்போ
துரையா யிருந்தது லேயாட்டாம்
மாரீச மல்ல விரண்டு துரைமார்க்கும்
மனதுதா னென்றாகும் ஞானப்பெண்ணே. (௫௪)

இவரு மவர்போற் சமுசாரி தானவ்
விருவ ரின் பந்து சனங்களெல்லாம்
பெரிய மனுஷராய் நல்ல நிலைபரம்
பேணிக் கொண்டாரடி ஞானப்பெண்ணே. (௫௫)

ஆண்டவ னுசீர் வாதத்தினா லவ
ராண்மையும் வீரமும் பூண்டிருந்தார்
பாண்டியன் போலவே நீதியாய் லோக
பரிபாலனஞ் செய்தார் ஞானப்பெண்ணே. (௫௬)

டங்கின் துரையென்றும் ஸ்கொட் துரை யென்றும்
சங்கையுள்ள துரைமா ரிருந்தார்
மங்கமாரி மற்ற வறல்துரை தானெல்லாம்
மரியாதை யுள்ளவர் ஞானப்பெண்ணே. (௫௭)

அசுக்கிச னென்னுந் துரையின் குணமோ
யதிக கொடுமை கடியமனம்
பிசுக்காலாக விருந்திங்கே செய்த
பெருங்கேடு மெத்தவாம் ஞானப்பெண்ணே. (௫௮)

பிறவுண்டிறீக் சென்னுந் துரையொருவர் மெத்தப்
பெரிய மனுஷ னறிவுடையோன்
அவரிற் பெரிய துரைமோய ரென்பவ
ரறிவாளி தானடி ஞானப்பெண்ணே. (௫௯)

செல்வரைக் கல்வி யறிவுடை யோர்களைத்
தேடித் தெரிந்தவர் வேலைவைத்தார்
நல்லதுரை யந்த மோயாட்டின் நன்மைகள்
சொல்லி முடியுமோ ஞானப்பெண்ணே. (௬0)

இவர்கீ ழனேக துரைமாரு மற்று
மிவ்வூர்ப் பெரிய மனுஷர்களும்
தலைமையாய் நின்று கடமைகள் செய்ததால்
சந்தோஷந் தானடி ஞானப்பெண்ணே. (௬௧)

அந்நாளி லுள்ள பிரபுக்க ளுருக்
கதிக நயமு முதவியுஞ் செயதார்கள்
இந்நாளி லுள்ள பணக்கார ரெல்லாரு
மீயாத லோபராம் ஞானப்பெண்ணே. (௬௨)

தற்கால பாஷை மிகக்குறைவு அப்போ
சனங்க ளறிவார்கள் போட்டுக்கீசு
மிக்க குமாஸ்தாக்கள் இரண்டொரு பேரவர்
வெள்ளை மனுஷர்தான் ஞானப்பெண்ணே. (௬௩)

கொம்மிஷன் மாரென வைந்துபேர் கூடிக்
குடிகள் வழக்கு விளங்கிவந்தார்
பின்னு லதனை நிறுத்தி மறுவிதஞ்
செய்தது கேளடி ஞானப்பெண்ணே. (௬௪)

மூன்று வகையான நீதி விசாரணை
முக்கிய மாம்புரோ வின்சல்கோடு
வேண்டுமூர் தோறு மஸ்திருக் துக்கோடு
விசாரணை செய்தார்கள் ஞானப்பெண்ணே. (௬௫)

மல்லாகம் பூநகர் சாவகச் சேரியும்
மற்ற ஊர்காவல் துறையு நெடுந்தீவும்
எந்நாளு மந்தப் பருத்தித் துறையிலு
மிருந்தது கோடுகள் ஞானப்பெண்ணே. (௬௬)

பேளித் துரையும் துசேன் துரையு மந்தப்
பேரியஸ் பெல்துவன் லெம்புரோக்கன்
சாதிமான் நோளன் மேபிரூங் கென்பவர்
தகுந்த துரைமார்கள் ஞானப்பெண்ணே. (௬௭)

ஒவ்வொரு கோட்டுக்கும் நீதிவா னாகின
ரொழுங்கான நீதி விசாரணை செய்தனர்
பின்னுல் நெடுந்தீவு பூநக ரிக்கோடு
பிழையென்று தள்ளினர் ஞானப்பெண்ணே. (௬௮)

பிசுக்கால் கோடென்றும் நீதிசெய் தாரந்தப்
பெரிய துரைமார்கள் காலத்திலே
ஒருக்காலு மந்த வுண்மை வழுவாது
உத்தம காலந்தான் ஞானப்பெண்ணே. (சுகூ)

தண்டனை செய்யும் விதங்களைக் கேளடி
சக்கரத் தில்வைத்துச் சிட்சைகள் செய்தனர்
வண்டர் குற்றப்படி காலரை யென்னும்
வழக்கம் நடந்தது ஞானப்பெண்ணே. (எ௦)

துட்டரைக் கள்ளரைச் சற்றும் விடாமல்
தொடர்ந்து பிடித்து மறியற் படுத்தியும்
மொட்டை மரத்திலே கட்டி யடிப்பித்தும்
மூர்க்கரைத் தண்டித்தார் ஞானப்பெண்ணே. (எக)

பார்க்க முடியாக் கொலைசெய்த பேர்களைப்
பலருங் காணுமலே தூக்கிக் கொலைசெய்தார்
தூக்கு மரக்காடென் றிப்போதும் பேசுமச்
சொல்லதால் வந்தது ஞானப்பெண்ணே. (எஉ)

முத்திரைக் காரியம் மெத்தக் குறைவுதான்
மோசமு மில்லைத் தாணி கிடையாது
சித்திர மாய்மெத்தச் சேர்த்துக்கொண் டாரிப்போ
தேசத்தைக் கேளடி ஞானப்பெண்ணே. (எந)

அப்போ வழங்கிய நாணயஞ் சொல்லுவே
னதிக வுயர்வு இறைசாலடி
மற்றுந் தொகைகள் பணந்துட்டுச் சல்லியாய்
வழங்கிவந் தாரவர் ஞானப்பெண்ணே. (எச)

சத்தியஞ் செய்யும் வழக்கத்தைக் கேளடி
தங்கள் பிள்ளை தலை மேற்றொட்டுஞ் செய்தனர்
உத்தமந் தங்க டலங்களிற் போயங்கு
முண்மைசெய் தார்முன்னும் ஞானப்பெண்ணே. (எரு)

துளசி யிலைத்தண்ணீர் வைசவர் குடித்தனர்
சோனகர் கோறனில் தொட்டு நடந்தனர்
பலபல சாதிக்கு மவரவர் மார்க்கம்போல்
பரிவாய் நடத்தினர் ஞானப்பெண்ணே. (எசு)

சட்டம்பி மார்முன் னெழுது மூறுதியைச்
சந்தோஷ மாய்க்கண்டுங் கேட்டதுண்டோ
நட்டமில் லாக்கட்டுப் பாடான வாசகம்
நான்சொல்லக் கேளடி ஞானப்பெண்ணே. (எஎ)

"பணத்தை யிறப்பே னிருதுபோ ஞல்நல்ல
பங்குனி மாதம் பகல்வழி போமவன்
கனத்த பாடுபடு வானது போல்நானுங்
கண்மத்துக் காவெனும்" ஞானப்பெண்ணே. (எஅ)

கையை யடித்துப்பின் னுணே மறந்தவன்
கன்றுக்குப் பாலே விடாமற் கறந்தவன்
ஐயா விவர்கள்தான் போகும் நரகத்துக்
கவன்போவா னுமடி ஞானப்பெண்ணே. (எகூ)

இப்போது அந்த வழமை கிடையாது
ஈடுகள் காட்டி யெழுதவேண்டும்
அப்படி யேதா னெழுதிவைத் தாலு
மதிலும் பலசள்ளு ஞானப்பெண்ணே. (அ0)

றிஜிஸ்றிரர் கந்தோர் முன்னு மிருந்தது
இப்படிச் சோலிகள் சற்றுமில்லை
சுத்தமாய்க் காணி யுறுதி யெழுதுவார்
துரைதான் முதலாளி ஞானப்பெண்ணே. (அக)

அவர்தான் உறுதி முடிப்பவ ரும்பின்
னவர்தான் பதிந்து கொடுப்பவரும்
இவர்போற் செலவு பலசள்ளு மெட்டுக
ளொள்ளள வில்லையாம் ஞானப்பெண்ணே. (அஉ)

நாணயம் யோக்கிய முண்மை மிகவுண்டு
நம்பிக்கை யப்போதான் வம்பு கிடையாது
காரிய மிப்போ தலைகீழாய்ப் போச்சுது
ஏனென் றறிவாயோ ஞானப்பெண்ணே. (அ௩)

காணி யுறுதி கடனுறுதி யொற்றி
கலியாண சீதன வோலை யுறுதிதான்
வேறே யுறுதி யெழுத்துக் கிடையாது
வெகுசுக மப்போதான் ஞானப்பெண்ணே. (அச)

அந்நாளிற் கள்ள வுறுதிகண் டாலதை
யமர்த்தி விளங்கி மறியற் படுத்துவர்
இந்நாளிற் கள்ள வுறுதி யானலு
மிழுப்பார்கள் சீவிலாய் ஞானப்பெண்ணே. (அசு)

அப்போ திருந்த துரைமார் தலைமைமா
ரன்பு நயம்பயம் நிரம்பவுண்டாம்
இப்போ திருப்பவர் தந்திர காரரென்
றெங்குந்தான் சொல்கிறார் ஞானப்பெண்ணே. (அரு)

அந்நாட் கொடுமைகள் செய்த சனத்தை
யடக்கி யவரவற் காக்கினை செய்குவர்
இந்நாளிற் பொல்லாக் கொலைசெய்த பேரையும்
இரட்சிக் கிறாரமே ஞானப்பெண்ணே. (அஎ)

ஆயிரத் தெண்ணூற்று ஆறும் வருஷத்தி
லச்சமான சுப்பி றீங்கோடு வைத்தனர்
தீரனு மந்த சோன்ஸ்ற்றன் என்னும்
சிரேட்ட பதிவந்தார் ஞானப்பெண்ணே. (அஅ)

அந்நாளி லிங்கே தரணி கிடையாது
யாராலு மிப்பாஷை பேச முடியாது
எந்நாளும் ராசா வரும்போ தவரெல்லா
மிசைய வருவார்கள் ஞானப்பெண்ணே. (அகூ)

இரண்டப்புக் காத்துமார் தம்பி தமையனும்
ஸ்றேடரின் பெயரென்று சொல்ல வறிந்தேனன்
கண்ட சனங்கள் வியந்தா ரவர்களின்
கல்வி யறிவைத்தான் ஞானப்பெண்ணே. (கூ0)

சுப்பிறீங் கோட்டுநாள் வந்த வுடனே
துரைமா ரெவரும் மறுவேலை பாராமல்
அக்கறை யாய்வந்து நின்றேவல் செய்வது
அந்நாள் வழமையாம் ஞானப்பெண்ணே. (கூக)

மேளதா ளங்கொட்டி யாலவட்ட மீட்டி
மேம்பாடு டன்துரை பாங்குசெல்ல
ஆதி சிவியார் சுமக்கப் பல்லாக்கின்
மீது வருவாராம் ஞானப்பெண்ணே. (கூஉ)

செங்கோல் முடிசாதி மான்கள் கொண்டுவரச்
சிங்களர் பின்னுக அங்கி தாங்கிவரத்
துங்க மதிபன்சிம் மாசனம் மேல்வரச்
சொல்லுவார் கட்டியம் ஞானப்பெண்ணே. (கக)

சிம்மா சனத்தி லதிபன் வந்தவுடன்
திரளாஞ் சனங்களும் மற்றெவ ருங்கூட
உன்னத வோவியம் போலிருப் பாரங்
கொருசத்தங் கேளாதாம் ஞானப்பெண்ணே (கச)

பிசுக்காற் சேவுகர் பொலிசுக ளிப்போ
பெரிய வடங்களைப் பூட்டி மறிக்கிறார்
ஒழுக்கம் பயமற்ற லக்ஷணம் நூற்றி
லொருபங்கு மில்லையே ஞானப்பெண்ணே. (கரு)

முத்தையா மற்றப் பிலிப்பு முதலியு
மொழுங்கான நல்ல தமிழ்ப் பேசுவார்
சித்திரம் பேசும் முதலிமாரி லிப்போ
செந்தமிழ் கண்டாயோ ஞானப்பெண்ணே. (கசு)

முன்னுள்ள நல்ல முதலிமாரி லந்த
முத்தையா வென்னும் முதலி யாரைச்
சொல்லவும் வாயுண்டோ பாஷைச் சிறப்பு
துரையா யிருந்தாரே ஞானப்பெண்ணே. (கஎ)

அவர்பின் பிலிப்பு முதலி யிருந்தா
ரவரும் பெரிய மனுஷனடி
யுரிமையு முண்மையும் பாஷை வடிவு
மொருவருக் கில்லையாம் ஞானப்பெண்ணே. (கஅ)

கல்வி யறிவிற் சிறந்த பெரியோரைக்
கண்டுதான் பூரியாய்க் கொண்டாடினார்
பண்டு வழமைக ளிப்போ கிடையாது
பணக்காரர் வேண்டுமாம் ஞானப்பெண்ணே. (கக)

செல்வப் பொருளினுங் கல்விப் பொருள்தான்
சிறந்த பொருளென் றறிந்திருந்தால்
வள்ளலே யானாலுங் கல்வியில் லாதாரை
வரிப்பாரோ பூரியாய் ஞானப்பெண்ணே. (க00)

தமிழுந் தெரியாது பாஷை தெரியாது
சட்டை தலைப்பா தெரியும் வடிவாக
அவரை யிருத்தி நடுநீதி சொல்லென்ப
தரசர்க் கொழுங்காமோ ஞானப்பெண்ணே. (க0க)

பரீக்ஷை கொடுத்தநல் லத்துவக் காத்துமார்
பணிவுடன் நின்று வழக்கு நடாத்துவர்
கனத்த துரைமா ரொழுங்கின் சிறப்பிப்போ
கருகித்தான் போச்சுது ஞானப்பெண்ணே. (க0உ)

முன்வந்த மோயாட்டின் காலத்தி லேசன
முற்றுக நன்மைதான் பெற்றுவந்தார்
பின்வந்த மற்றத் துரைமா ரொழுங்கைநான்
பேசுவேன் கேளடி ஞானப்பெண்ணே. (க0௩)

மோயாட், லேயாட் காலம் முற்றிற்று.

---

## டயிக், பிறைஸ் காலம்.

### விருத்தம்.

இருசுட ரென்னப் பின்னே
யிரண்டுநல் லிறைவர் வந்தா
ரொருவர்பேர் டயிக்காம் மற்ற
வுயர்துரை பிறைஸா மென்பர்
பெருமித நடையு மன்பும்
பேரறி வுடனே யாரும்
வெருவுற வரசு செய்த
மேன்மையை விளம்பு வேனே.

ஆயிரத் தெண்ணூற் றிருபத்தெட் டாமாண்டி
லந்தத் துரைமார்கள் வேலைவிட்டார்
சாதியி லுள்ள பிறைஸ்துரை யிங்கே
ஜட்ஜாக வந்தனர் ஞானப்பெண்ணே. (க)

ஏசன்று வாக டயிக்கும்வந் தாரிங்கு
எல்லவர்க் கும்நல்ல காலமடி
பாரி லிருக்கிற வேழைக் குடிகளைப்
பண்பாய் நடத்தினர் ஞானப்பெண்ணே. (உ)

முன்னுள்ள கோட்டி னொழுங்கு அடங்கலும்
முற்றுக மாற்றி யொழுங்குசெய்தார்
என்ன விதமென்னி லெங்குள்ள கோடெல்லாம்
டிஸ்திறிக் காமடி ஞானப்பெண்ணே. (௩)

அந்நாளில் நீதிவா னெல்லவ ரும்மூன்று
அசெசமா ரைக்கூட வைத்து விளங்குவார்
சின்னாளி லந்த வொழுங்கையுந் தள்ளின
தென்ன கருத்தடி ஞானப்பெண்ணே. (௪)

சேத வுடையார் கயிலாய பிள்ளை
சிறந்த மணிய மிவர்க ளிருவரும்
காரிய நன்மை யொழுங்கு குடிகள்மேற்
கண்ணாய் நடந்தாராம் ஞானப்பெண்ணே. (௫)

சோனக ருள்ளு முடையார் மணியம்
தொழிலவர் சாதிக்குள் வைத்து நடத்தினர்
சீலமல்ல வென்று தள்ளி யதனையும்
சேர்த்தார்வண் மேற்குடன் ஞானப்பெண்ணே. (௬)

மாணு மாப்பிள்ளை மரைக்காய ரப்போ
மணியம் பெரிய மரபினி லுள்ளவர்
சோனகர் யாரு மவர்பார்த்துச் சொல்லுமோர்
சொல்லிலே நிற்பராம் ஞானப்பெண்ணே. (௭)

அந்நாட் டலைமை பெரிய மனுஷர்க்கு
அந்தந்தச் சாதி யடங்கி நடந்தது
இந்நாள் மரியாதை யெங்குங் கிடையாது
எட்டிக்குப் பூட்டி தான் ஞானப்பெண்ணே. (௮)

ஆயிரத் தெண்ணூற்று முப்பத்தைந் தாமாண்டு
அந்தச் சிறைகளை யிட்டம்போல விட்டார்
மீன்குத் தகையையும் நாற்பதா மாண்டினில்
மிடியென்று தள்ளினார் ஞானப்பெண்ணே. (௯)

இவர்காலத்தி லந்த நாணயங்கள் தள்ளி
எற்பாடு செய்தார் பவண்ஷிலிங் பென்சென்று
அவர்கால முற்று மதுவே வழங்கினு
ஏப்பாற் சதமாச்சு ஞானப்பெண்ணே. (௧௦)

ஆயிரத் தெண்ணூற்று நாற்பத்து நாலா
மாண்டினில் வேறொரு மாறுதல் செய்தனர்
தோன்றும் பெருங்கோடு சீதாரியில் மற்றச்
சுற்றெல்லாங் கீழ்க்கோடாம் ஞானப்பெண்ணே. (௧௧)

டிஸ்திறிக் கோடு முதற்கோடு மற்ற
றெக்குவெஸ் தூக்கோடு தொகைகுறைவு
அடுத்தங்கே சேர்த்தார் பொலிசு சமாதான
மதிக வொழுங்காக ஞானப்பெண்ணே. (கஉ)

கீழ்க்கோட்டு நீதிவா னூட்துரை போற்றுரை
கெம்மல் துரையுங் கியூம்துரையும்
தீர்க்கமுள்ள மோயாட் பேள்ச லிவரெல்லாஞ்
சீராய் நடந்தார்கள் ஞானப்பெண்ணே. (கரு)

பெத்தானுடன் நன்னி கைக்குளக் காசியாம்
பெருங்கள்ள ரூரில் திரண்டு இடைக்கிடை
மெத்தக் களவு நடத்துகி றாரென்ற
சத்தம் பிறந்தது ஞானப்பெண்ணே. (கச)

துரித முடைய பெருங்கள்ளரை யூரால்
தொலைக்க டயிக்குத் துரையும் நினைந்து
முருகுடை யார்வீட்டுக் களவிலக் கள்ளரை
முற்றுந் தொலைத்தாரே ஞானப்பெண்ணே. (கரு)

கள்ளர் கொடுமை யில்லாமற் றொலைத்தனர்
கடைவீதி சந்தை வகுத்துக் கொடுத்தனர்
வெள்ளாளர் செட்டிமா ரெல்லாரை யும்மெத்த
மேலாய் நடத்தினர் ஞானப்பெண்ணே. (கசு)

கச்சேரி யிற்பல கந்தோர் வகுத்தனர்
கனமான பேர்களை வேலையில் வைத்தனர்
உச்சித மான துரைமாரெல் லாஞ்சேர்ந்து
உரிமைகொண் டாடினர் ஞானப்பெண்ணே. (கஎ)

இஞ்சினீர்க் கந்தோரும் பேண்துரை யுங்கூட
இவர்கள் கருத்துக் கிசையநின்றார்
பஞ்சுக மானநல் வேலைமுன் னளிப்போ
பறையர் தொழிலாச்சு ஞானப்பெண்ணே. (கஅ)

ஆயத் துறைக்குத் துரையா யிருந்தது
அந்தப் பிளண்டக்கா நன்மனிதன்
நியாய விளக்கத்துக் கான முதலியார்
நீக்கிலா சாமடி ஞானப்பெண்ணே. (கக)

தீர விசாரித்துச் செய்வார் முதலியார்
செட்டி வியாபாரி நட்டப்பட விடார்
ஆரைக் கண்டாலும் மருமக னேயென்று
அன்பாகப் பேசுவார் ஞானப்பெண்ணே. (உ0)

இரேகுத் துறைமுகம் மற்றுமிட மெங்கு
மெங்கள் டயிக்குத் துரைதான் முதலாளி
காரிய மெல்லா மவர்கட் டளைப்படி
கவனமாய்ச் செய்வார்கள் ஞானப்பெண்ணே. (உக)

கச்சேரி கோட்டின் சிறப்புகளை முன்னே
கண்ணாலே கண்டாற் பசிவராது
நிச்சய மாயந்த நீதி விசாரணை
நிசமாய் முடியுமாம் ஞானப்பெண்ணே. (உஉ)

எங்கள் பிறைஸ்துரை காலத்தி லிங்கே
யிருந்த தாணிமார் கல்வியும் நன்மையும்
சங்கையா யூர்க்கு நடந்த சிறப்பையும்
சாற்றுவேன் கேளடி ஞானப்பெண்ணே. (உங)

கோக்கு துரேன்வன் ஞேசன் உவில்லியம்
கொலற்ஞே மொடார்மயில் வாகனமும்
ஆக்குத்துப் பெற்ற தாணிமா ராக
வதிபன் முன் பேசுவார் ஞானப்பெண்ணே. (உச)

ஆரு மறியநல் நியாயங்கள் போதிக்க
வான தாணிமா ரில்லாமையால்
பாரில் தமிழ்கற்ற நாலைந்து பேருக்குப்
பட்டந்தான் கட்டினர் ஞானப்பெண்ணே. (உரு)

அப்புக்குட்டி ஐயர் செல்லிநாகர் பின்னு
மந்தச் சேனாதர் சூசைப்பிள்ளை
இப்படி நல்ல தமிழ்ப்பாஷை கற்றவ
ரிருந்தார் சிலகாலம் ஞானப்பெண்ணே. (உசு)

வரவரப் பாஷை படித்துணர்ந் திங்கே
வந்து குதித்தார் தாணிமார்கள்
அருமையும் வீரமும் நீதியுங் காட்டியே
யள்ளினர் காசெல்லாம் ஞானப்பெண்ணே. (உஎ)

பின்னாக வந்த தரணிமா ராரெனில்
பெரியதொம் பிள்ளை வெலிச்சோர்ப்பிள்ளை
நல்ல வயித்திய லிங்கமுந் தம்பியும்
நாற்பதின் மேல்வந்தார் ஞானப்பெண்ணே. (உஅ)

நெல்லிப் பழையிற் றரணி சின்னக்குட்டி
சிறந்த குலத்திற் பிறந்தவராம்
கல்வியும் பாஷை குறைந்திருந் தாலும்
காசு குறைவில்லை ஞானப்பெண்ணே. (உகூ)

சின்னப்பா வென்பவர் நியாயம் படிக்கச்
சிறந்த கொழும்பினில் மோர்க்கனி டஞ்சென்று
நன்னய மாகப் படித்துத் தரணியில்
நல்லவ ராய்வந்தார் ஞானப்பெண்ணே. (௩0)

எத்தனை பேர்தான் தரணிக ளானாலு
மிவரைத்தான் சோதனை பண்ணிக் கொடுத்தது
அத்தனை பேரிலும் நியாய வுணர்ச்சி
யதிக நுணுக்கமாம் ஞானப்பெண்ணே. (௩க)

அப்போ திருந்த தரணிமா ரிற்கல்வி
யறிவிற் சிறந்தவ ரைந்துபேர்தான்
தப்பாம லேயிந்த வூரிற் சனமெல்லாம்
சந்தோஷங் கொண்டார்கள் ஞானப்பெண்ணே. (௩உ)

அந்தக் கவண்மேந்தின் நியாயங்கள் பேச
வனுப்பிவைத் தாரப்புக் காத்துமாரை
சிந்தை மகிழ்ந்து பிறைஸ் டயிக்குடன்
சேர்ந்து நடந்தார்கள் ஞானப்பெண்ணே. (௩௩)

போயிலோ வென்கிற லோயர்வந் தாரவர்
பின்னாக வந்தது ஸ்றூவாட்டாம்
சாதி அயிறிஷ் லான்சிலோ வென்கிற
சண்டைக் காறன்வந்தான் ஞானப்பெண்ணே. (௩ச)

ஸற்றீன் பாஷையில் வல்லமைதான் பேசும்
சத்தமும் சால பயங்கர முள்ளது
சித்த மிரக்கஞ் சிறிதுமில் லைக்கோபஞ்
சிந்தும் முகத்திலே ஞானப்பெண்ணே. (௩௫)

அப்பால்வந் தார்கிரேஸ் என்றொரு வர்பின்
னவரைத் தொடர்ந்தார் மறைத்துரையும்
இத்தனை பேரி லிவர்வல்ல பஞ்சொல்ல
வென்றாலே கூடாது ஞானப்பெண்ணே. (௩௬)

புத்தியும் பூரண வித்தையும் பாஷையிற்
போந்த சிறப்பும் பொலிவுமுள்ள
வித்துவான் முத்துக் கிட்டின னென்கிற
வீரனுந் தோன்றினன் ஞானப்பெண்ணே. (௩௭)

நெல்லென் றொருநல்ல லோயர்வந் தார்பின்பு
நேர்மையுள்ள துவேறஸ் தானும்வந்தார்
பின்னாக வந்தார் கிறீசியப் புக்காத்துப்
பெரிய துரைமகன் ஞானப்பெண்ணே. (௩௮)

ஈறாக வந்தது ஹேயப்புக் காத்தடி
யென்னசொல் வேன்பஞ்ச தந்திர யுக்திகள்
ஆராலுங் காண முடியா துபாயங்க
ளஞ்சாத நெஞ்சன்தான் ஞானப்பெண்ணே. (௩௯)

போயிலோ காலத்தி லூரவர்க் காகப்
புறப்பட்ட லோயர் கேமிசென்பார்
வாய்வல்ல பத்தி லவரைப்போ லின்னமும்
வாய்க்க வில்லையாமே ஞானப்பெண்ணே. (௪௦)

ஒலிவன் றீதிபதி கேமிலின் பேச்சை
யுவந்து அதிக பெருமை பாராட்டினர்
அதிக சிமிட்டுங் கருத்துஞ் செவிக்கு
அமுதமா மேயடி ஞானப்பெண்ணே. (௪௧)

முன்சிறுத் தீவிலே யம்மைச் சனத்தை
முரட்டுத் தனமாக வைத்துவந்தார்
பின்னிருந்த ஆருடன் வைக்க நியமித்த
பெரியவன் கேமிஸாம் ஞானப்பெண்ணே. (௪௨)

வாதிக்குப் போயிலோ மற்றவனும் பிரதி
வாதிக்குக் கேமிசு வாகநின்று
சாதிக்குந் தர்க்க வொழுங்கையும் பேசுஞ்
சமர்த்தையுங் கண்டாயோ ஞானப்பெண்ணே. (௪௩)

லான்சிலோ காலத்தில் டச்சுலோ வையவர்
வாஞ்சையாய்த் தர்க்கங்கள் பேசிவந்தார்
பாங்குடன் தேச வழமையல் லாதொன்றும்
பாரார் துரையடி ஞானப்பெண்ணே. (௪௪)

மறையப்புக் காத்து வொருபக்க மாகவும்
மற்றப் பக்கம்முத்துக் கிட்டின ராகவும்
எதிரெதி ராயவர் பேசும் வடிவைநா
னென்னென்று சொல்லுவேன் ஞானப்பெண்ணே. ()

நல்ல தரணிமார் தம்முட னேநீதி
சொல்ல வறிந்த பெரியப்புக் காத்துமார்
வல்லமை யாக நடத்தும் வழக்கின்
வடிவு மறிவாயோ ஞானப்பெண்ணே. (௪௬)

நாலு மறையென்று சொல்லுவா ருரிலே
நியாய முழுது மதிலே பிறந்தது
ஆனால் மறையென்ற பேருங் குணமு
மவர்க்கே தகுமடி ஞானப்பெண்ணே. (௪௭)

மூன்றுநா ளைக்குமுன் கொப்பி கொடாவிடில்
முன்னே வழக்கினி லேற்பட் டிருந்தாலும்
வேண்டின காசு கொடுக்கிற தல்லது
வெளிப்பட மாட்டாரே ஞானப்பெண்ணே. (௪௮)

தரணி சின்னத்தம்பிப் பிள்ளையு மந்நாளில்
தகுந்த க்வர்ண்மேந் தரணியானார்
அரசர்க் குரிய கரும வழக்கெல்லா
மழகாய் நடத்தினார் ஞானப்பெண்ணே. (௪௯)

இப்போ சிலநாள் கவர்ண்மேந்தின் காரிய
மேலா தென்றுசொல்லித் தானாய் விடுத்தனர்
அப்பாலவ் வேலைக்கு வந்தவர் நன்மையைச்
செப்புவேன் பின்னாலே ஞானப்பெண்ணே. (௫௦)

அப்போ திருந்த தரணி யப்புக்காத்து
அதிக கவனம் வழக்கின்மேலே
இப்போ திருப்பவர் இரண்டொரு பேர்நல்ல
எண்ண முடையவர் ஞானப்பெண்ணே. (௫௧)

ஆர்வந்தா லும்நல்ல நியாயங்கள் பேசியே
யாதரிப் பார்முன் தாணிமார்கள்
பார்வையிப் போசிலர் கள்ள வழிசொல்லிப்
பலரைக் கெடுக்கிறார் ஞானப்பெண்ணே. (௩உ)

நீர்நின்ற காடுபோற் கோபங்காட் டாமலே
நெஞ்சினில் வைரமுஞ் சாதிக்கிறார்
தேடி யடுத்துக் கெடுப்பவர் பங்கிலே
சேர்வது புத்தியோ ஞானப்பெண்ணே. (௩௩)

ஒருதாய் பெற்றபிள் ளைபோலத் தாணிமா
ரொற்றுமை பற்றிங்கே வைத்து நடந்தவர்
இருகூறு யிப்போ பிரிந்துகொண் டாரது
யாராலே சொல்லுநீ ஞானப்பெண்ணே. (௩௪)

நல்ல தாணிமார் நாலைந்து பேருண்டு
நன்மை யவரா லதிகமுண்டு
சொன்னால் முகமனு மானாலும் பின்னாலே
சொல்வே னவர்நயம் ஞானப்பெண்ணே. (௩௫)

அந்தத் தாணிமார் காலத்தி லேயேது
மநியாய மான வழக்குமுண்டோ
இந்தத் தாணிக ளிற்சிலர் வம்பை
யெடுத்துத் தொடுக்கிறார் ஞானப்பெண்ணே. (௩௬)

எங்கள் பிறைஸ்த்துரை நீதவா னகவே
யிருந்தகா லத்திலே யாதொரு கேடுகள்
வந்ததுண் டோசொல்லு நீத வொழுங்கில்
வழுவுமுண் டோசொல்லு ஞானப்பெண்ணே. (௩௭)

கிறினிய ரக்காளிற் சக்கிடுத் தார்மெத்தக்
கெட்டிக்கா ரன்மார்க்க பக்திக்காரன்
அவர்பெற்ற பிள்ளைகள் நால்வரு மிப்போ
அறுபோக வான்கள்தான் ஞானப்பெண்ணே. (௩௮)

யோன்பு விராசசிங்க முதலியார்
தோற்றமு மாங்கவர் தூய்மொழியும்
கருமஞ் சிதறாமல் வாய்மை தவறாமல்
கருத்துடன் பேசுவார் ஞானப்பெண்ணே. (௩௯)

தன்னைப் பெரிதாய்ப் புழுகமாட் டாரவர்
தன்சாதி மேலென் றுஞ் சொல்லமாட்டார்
பின்னொன்று முன்னொன்று பேசமாட் டாரது
பெரியோர் குறியடி ஞானப்பெண்ணே. (௬௰)

கீழுத்தி யோகர் மறுனோ மொடரெல்லாம்
கெடுத லில்லாத கிளாக்குமார்கள்
ஞானப்பிர காசமும் சேவுக ரும்மெத்த
நல்ல மனுஷர்தான் ஞானப்பெண்ணே. (௬௧)

எசன்று வாக டயிக்கிருக் கும்போது
யாரிடங் கேட்டெடுந்த வேலைவைத்தார்
ஆன கருமங்கள் தானே நடத்துவா
ரதுசரி தானடி ஞானப்பெண்ணே. (௬௨)

மாட்டு னறிவாளி சூத்திர வேலை
மனதா யறிந்த வியப்பை யுடையவர்
பாத்திர மாயந்த ஸ்டோர்க்கீப்பர் வேலையிற்
சேர்த்துவிட் டார்துரை ஞானப்பெண்ணே. (௬௩)

சுப்பிறீங் கோட்டு முதலியா ராயந்தத்
தொழிலும் வெகுநாள் நடத்திவந்தார்
செப்புவ தென்னடி வல்லவன் பம்பர
மெப்படி யுமாடும் ஞானப்பெண்ணே. (௬௪)

அவர்வைத்த வேலைச் சனங்களி லேகுற்ற
மாராலுஞ் சொல்ல முடியாதடி
துரைமார் முதலாக மற்றுந் தொழிலாள
ரெவரும் நடுங்குவார் ஞானப்பெண்ணே. (௬௫)

கேள்விச் செவியர்க ளூரைக் கெடுத்தது
கெட்டியா யாரு மறிந்த பழமொழி
பாரி லிதற்குச் செவிகொடுக் காத
பரிசுத்த வானவர் ஞானப்பெண்ணே. (௬௬)

கந்தோர் முதலி சவரிமுத் தாமடி
கனவான் பெரிய குலத்தில் மனுஷன்தான்
எந்தக் கருமமு மஞ்சாமற் பேசி
யெடுத்து முடிப்பாராம் ஞானப்பெண்ணே. (௬௭)

கச்சேரி வேலைக ளூரிற் கருமங்கள்
கவனமா யப்போ முடித்துவைப்பார்
இப்போ திருப்பவர் நெஞ்சிற் பயமில்லை
யெல்லா மிழுக்கடி ஞானப்பெண்ணே. (௬௮)

ஊரிற் சனம்மெத்த வஞ்சமாட் டாரப்போ
வுத்தியோக ரெல்லா மஞ்சுவார்கள்
காரிய மிப்போது மாறி நடக்குது
கண்டு அறிந்துகொள் ஞானப்பெண்ணே. (௬௯)

தருமான வேலை மணிய முடையார்
சரியான நல்ல மனுஷர்க ளைத்தேடி
வெகுகால மாயிங்கே வைத்து நடத்தின
தெவரு மறிவார்கள் ஞானப்பெண்ணே. (௭௦)

இஸ்லாம் சனங்களில் நல்ல மனுஷன்
இனயத்துல் லாவுக்கே வேலைகொ டுத்தனர்
பலர்கந்தோர் வேலைகள் கேட்டுங் கொடாத
பயன்தெரி யாதடி ஞானப்பெண்ணே. (௭௧)

எங்கள் டயிக்குத் துரையு மிரண்டாண்டு
இன்பமாய் முத்துச் சிலாபம் நடப்பித்தார்
சிங்கள ரூரவர் செட்டிகோ மட்டிகள்
திரளாய்வந் தாரங்கே ஞானப்பெண்ணே. (௭௨)

வந்த சனத்திற்கு அங்கங்கே மெத்த
வசதி கொடுத்து வுபசரித் தாரென்று
எந்தச் சனங்களும் வியாபாரி செட்டிக
ளிப்போதுஞ் சொல்கிறார் ஞானப்பெண்ணே. (௭௩)

தரிப்பி லதிகமாய்க் கூட்டிவிற் காரவர்
சனங்க ளொருவர்க்கும் நட்டஞ்செய் யார்
அரிப்பிற் சிலாப வடிவும் நயங்களு
மந்நாளி லாமடி ஞானப்பெண்ணே. (௭௪)

அந்தத் துரைமார்கள் காலத்தில் வியாபாரி
யனைவரு மாசை யுடன்வந்து சேருவார்
இந்தத் துரைகாலம் வியாபாரி சாய்ப்பங்கே
யேன்வந் ததுசொல்லு ஞானப்பெண்ணே. (௭௫)

தேச அதிபதி யூரின் சிறப்பைத்
தெரிசிக்க வெண்ணி வருமந்த நாட்களிற்
கூசாமற் கோவிலின் மானேசர் மூலமாய்க்
கூட்டம் நடத்துவர் ஞானப்பெண்ணே. (எசு)

அந்தச் சபைதனிற் கோயில்மா னேசரு
மவர்களு டன்கூட முத்துவேல் செட்டியார்
பந்தமாய் மற்றப் பிரபுக்க ளுஞ்சேர்ந்து
பண்பாய் நடத்துவார் ஞானப்பெண்ணே. (எஎ)

அவர்காலம் தேச அதிபதி மார்க
ளருமையா யிவ்வூரை வந்து தெரிசிப்பர்
இவர்காலம் மெத்த நெருக்கி வருகிற
தென்ன கருத்தடி ஞானப்பெண்ணே. (எஅ)

கச்சேரி ஆபீசு லக்ஷணங் கள்கண்டு
கவர்ணர் முதலாய் வியந்துகொண்டார்
மிச்சம தாயிந்த வூர்க்குத் துரைசெய்த
மேன்மையைக் கேளடி ஞானப்பெண்ணே. (எகூ)

ஊர்களெங் கேயங்கே ரோட்டுவைத் தாரவ
ரொவ்வொரு வூரார்க்கும் வேலைவைத்தார்
பாலர் படிக்கும் பொருட்டுக் கவர்ண்மேந்துப்
பள்ளி வகுத்தாரே ஞானப்பெண்ணே. (அ0)

கவர்ண்மேந்துப் பள்ளியிற் பிள்ளைகள் கூடியே
காசில்லா மற்கல்வி கற்றுவந்தார்
அநியாயந் தானிப்போ பாதிரி மார்சேர்ந்து
அள்ளுகி றார்காசு ஞானப்பெண்ணே. (அக)

பிள்ளைகள் சம்பள மொன்றுபத் தாச்சுது
பிரசங்க மல்லாற் படிப்புக் கிடையாது
நல்வழி சேர்க்கவோ காசுதான் சேர்க்கவோ
ஞானறி யேனடி ஞானப்பெண்ணே. (அஉ)

நாட்டிற் சனத்தேடி வேலைவைத்து அவரை
நல்ல பணக்கார ராக்கிவைத்து
காட்டு நிலத்தையும் நன்னில மாக்கிக்
கடமைகள் வாங்கினார் ஞானப்பெண்ணே. (அந)

சைவர்க ளாலய பூசை நடைபெறத்
தம்மா லியன்ற வுதவியப் போசெய்தார்
ஐயா கமக்காரர் செட்டி யனைவர்க்கு
மதிக துணைசெய்தார் ஞானப்பெண்ணே. (௮௪)

பெற்ற பிதாவிடம் பிள்ளைகள் போய்த்தம்
பிரியங்கள் சொல்லிப் பெறுவதுபோல்
உற்றயாழ்ப் பாணச் சனத்துக்கெல் லாம்நல்ல
வுபகாரி தானவர் ஞானப்பெண்ணே. (௮௫)

கிரி மலைக்குச் சனங்களெல் லாம்போய்
கிருபையுள்ள தீர்த்த மாடிவரப்
பாதை வகுத்துக் கொடுத்துவிட் டாரந்தப்
பலனை யறிவாயோ ஞானப்பெண்ணே. (௮௬)

தேர்முட்டி மேலந்தப் பாலை மரங்கள்
செலுத்த முடியாத தன்மைகண்டு
ஆளுடன் பாய்மரம் கப்பி கயிறுகள்
அழைத்துக் கொடுத்தாரே ஞானப்பெண்ணே. (௮௭)

முன்வேலை யான பறங்கிக ளைத்தள்ளி
முறைமுறை யாகவே சைவ சனங்களைப்
பின்வேலை வைத்த பரிசுகண்டு அவர்
பெட்டிசம் விட்டாராம் ஞானப்பெண்ணே. (௮௮)

தேச அதிபதி பெட்டிசங் கண்டும்
தெளிவாய் டயிக்குத் துரைசொன்ன நியாயந்தான்
போதிய தென்று வுணர்ந்து துரைசெய்த
புத்தியை மெச்சினார் ஞானப்பெண்ணே. (௮௯)

தட்டார அம்பல வாணரை வெட்டினரை
கட்டாயஞ் செய்து மறியல்வைத்தார்
கெட்டாருக் குத்துணை யானது ரைசெய்த
கிருபை தெரியுமோ ஞானப்பெண்ணே. (௯௦)

கொம்மிற்றல்ப் பத்திரம் மெத்தப் பிழையென்று
கோபமுன் னதுரை தன்னைத் திருத்தென்றார்
சின்னப் படவே துரைமறுத் தாருடன்
சிறையாலே நீக்கினார் ஞானப்பெண்ணே. (௯௧)

சைவர்தம் கோவிற் செலவுக்காக வங்கே
சந்தோஷ மாய்ப்புஷ்பங் கேட்டுவந்தால்
ஐயமில் லாமற் கொடுவென்று கங்காணிக்
காஞ்ஞைசெய் தாரடி ஞானப்பெண்ணே. (கஉ)

வல்லி புரக்கோவிற் சேவைசெய் யச்சனம்
வருந்தி நடக்கும் வருத்தங்கண்டு
நல்ல மனசுடன் றேட்டு வகுத்திட்ட
நன்மை தெரியுமோ ஞானப்பெண்ணே. (கங)

வண்ணைச் சிவன்கோயில் தன்னில் துரைமார்கள்
வந்துமுன் செய்த வலாற்காரங் கேட்
டெண்ணி யினிமேல் துரைமார் குழப்பாத
தெழுத்து மறிவாயோ ஞானப்பெண்ணே. (கச)

மானிப்பாய்க் கோயிலில் மேளத் தொனியால்
மனது வருந்திக் கிறீனும் முறையிட
வேழைக் கிரங்குந் துரையவர் வேகத்தாக்
கென்னசொன் ஞர்சொல்லு ஞானப்பெண்ணே. ()

சண்டை குழப்பங்கள் வாராம லூர்ச்சுகங்
கண்டு நடப்பது வென்கடனும்
பண்டைத் தெருப்பிலே போயிரு மென்றொரு
துண்டு அனுப்பினுர் ஞானப்பெண்ணே. (கசு)

சாவகச் சேரி விறுமர்தன் கோயிலில்
தட்டவேண் டாம்பறை யென்றுஜிம் மோத்துரை
யெவிய கட்டளை முற்றுப் பெறுவகை
யென்னசெய் தார்சொல்லு ஞானப்பெண்ணே. (கஎ)

அந்தச் சமயத்தில் லான்சிலோ வென்கிற
அத்துவக் காத்துவை யவ்விடம் போம்படி
முந்தி யனுப்பியே பூசையும் மேளமும்
முன்போல் நடத்தினுர் ஞானப்பெண்ணே. (கஅ)

வண்ணைச் சனங்களிற் சைவர்கள் மேல்மெத்த
மானம் டயிக்குத் துரைவைத் திருந்தது
என்ன விதியோ விபர்மன யிப்போ
வெதிரா யிருக்குதாம் ஞானப்பெண்ணே. (ககூ)

ஊட்டுத் துரைசெய்த குற்றத்தைக் கேட்டு
உடனே கொமிசன்மார் வந்து விளங்கி
நாட்டுச் சனங்க ளறிய விலக்கிய
நியாய மறிவாயோ ஞானப்பெண்ணே. (க௦௦)

இஞ்சினீ ரான கிளனித் துரைமுன்
னெடுத்தார்க ளவாகப் பெண்ணென்று கோட்டைக்குள்
அஞ்சாம லெங்கள் பிறைஸ்துரை தீர்வை
ஆறுமா தஞ்சொன்னார் ஞானப்பெண்ணே. (க௦க)

நியாயந் தவறில் துரையென்றும் பார்ப்பரோ
நியாய வொழுங்குதப் பாமற்செ லுத்துவர்
பாவிக ளிப்போ வதனை யுணராமற்
பரிபவ மேற்கிறார் ஞானப்பெண்ணே. (க௦௨)

பேன்சல் துரைமுன்னே கீழ்க்கோட்டு நீதவான்
பெரிய புறாடியை மறியற் படுத்தின
காரியத் தில்துரை குற்றஞ்செய் தாரென்று
கண்டு பிடித்தார்கள் ஞானப்பெண்ணே. (க௦௩)

காப்பென்றர் ரேவென்னும் நீதி யதிபதி
கனத்த பிழையைத் துரைமேலே கண்டுநீ
சீக்கிரம் வந்து பொறுதிகே ளென்ற
செய்தி தெரியுமோ ஞானப்பெண்ணே. (க௦௪)

மொறிஸ்த்துரை கோட்டை டாக்குத்த ரோடே
முரட்டுத் தனமாகச் சண்டை பிடித்தனர்
தெரிய விளங்கியப் பேன்சல் துரைசொன்ன
தீர்வையுங் கண்டாயோ ஞானப்பெண்ணே. (க௦௫)

மூன்றுமா தத்துக்கு மறியலு மூழியம்
முடிவான தெண்டமு மைந்து பவுணடி
தேர்ந்திந்தத் தீர்வையை மொறிஸ்த்துரை மேலே
தீட்டினார் பேன்சலும் ஞானப்பெண்ணே. (க௦௬)

எசன்று மந்தப் பிறைஸ்த்துரை யுமப்போ
விவர்குண நீதி குறைவுகண்டு
காரிய வுண்மை யரசர்க் கறிவித்துக்
கடத்தினா ராலே ஞானப்பெண்ணே. (க௦௭)

செம்மல் துரையோர் தாணி யிடத்திலே
கேட்டுப்பெற் றார்பணம் நோட்டின்மேலே
பின்னால் பிறைஸதை அறிந்து கொடுத்தவர்
பிசகுதீர்த் ததென்ன ஞானப்பெண்ணே. (௧௦௮)

ஊரா ரிடத்தில் துரைமார் கடன்க
ளொருபோதும் வாங்கவுங் கூடாதென்று
நேரே பிறைஸ்பலர் முன்னேசொன் னதனை
யார்தா னறியார்கள் ஞானப்பெண்ணே. (௧௦௯)

பிரபுக்கள் வீட்டிற் கலியாண மானாலும்
பெரிய டயிக்கங்கே போவதில்லை
சரியற்ற கூத்து விருந்துகொண் டாட்டங்கள்
சாரா ரொருநாளும் ஞானப்பெண்ணே. (௧௧௦)

பொலிசுக ளிவ்வூரில் வைக்கவேண் டாமென்று
போராட்டஞ் செய்தா ரனேககாலம்
சிறிய மனுஷ ரெளிமை யுணராத
செங்கோலாய்ப் போச்சுது ஞானப்பெண்ணே. (௧௧௧)

ஏழை குறைகுற்றந் தானறி யும்படி
யெப்பொழு தும்முறைப் பாடுகேட்டார்
வேளை தவறும லூர்சுற்றிப் பார்ப்பதவ்
வேந்தன் வழக்கந்தான் ஞானப்பெண்ணே. (௧௧௨)

ஏழைக ளைக்காக்க வேண்டுமென்ற சித்த
மெப்போது மந்தத் துரைக்குள்ளது
ஊரை வதைத்துத்தன் காரியம் பார்க்க
வொருபோது மெண்ணாரே ஞானப்பெண்ணே. ()

தான தருமங்கள் கூடிய மாத்திரம்
வேணமட்டு மிந்த வூர்க்குச்செய்தார்
காணலாங் கண்ணால் வயித்திய சாலையைப்
போலெவர் செய்தார்சொல் ஞானப்பெண்ணே. ()

வந்த துரைமார்கள் காசுக ளைச்சேர்த்துச்
சொந்தவூர் கொண்டவர் போவதல்லால்
இந்தத் துரைபோல்நம் மூர்க்குப் பெருமை
யெவர்செய்தார் சொல்லடி ஞானப்பெண்ணே. ()

தன்வீட்டு வேலைச் சனங்களுக் கும்மற்றச்
சட்டம்பி கங்காணி யின்னோர்க்குஞ் சம்பளம்
என்ன தலையதா னிறந்தாறு மாதமு
மேன்கொடுத் தார்துரை ஞானப்பெண்ணே. (கக௬)

பொறுமை தயவு வடக்க வறிவு
பொருந்திய நன்மைகள் புன்மை கிடையாது
அவர்போ லறத்துறப் புள்ள துரைமார்க
ளாரையுங் கண்டாயோ ஞானப்பெண்ணே. (கக௭)

கடன்வாங்கி ஞூறொன்ற சத்த மெவரெந்தக்
காலத்தி லுங்காதிற் கேட்டதுண்டோ
திடமாகச் சாய்ப்பிலே சாமான்கள் வாங்கின
செய்தியு முண்டோசொல் ஞானப்பெண்ணே. ()

கல்வி யறிவுக்குத் தக்க விதமாகக்
கண்டுகண்டு தொழில் தான்கொடுப்பார்
நல்ல மனுஷரைத் தேடிவைத் தாரந்த
நாள்நல்ல நாள்தானே ஞானப்பெண்ணே. (கக௯)

மணிய முடையார் விதானை யிவரெல்லாம்
மகன்போ லென்று மதிக்கத் தகுந்தவர்
அவர்சொல்லும் வார்த்தைக்கு ஊரிற் சனம்மெத்த
வஞ்சி நடந்தாராம் ஞானப்பெண்ணே. (க௨0)

எங்கும்முன் னல்ல துரைமார் தலைகூமமா
ரிப்போதும் மாறும வப்படி யேயுண்டு
சங்கை பெருமை நயங்குண மெல்லாஞ்
சரிதானோ பாரடி ஞானப்பெண்ணே. (க௨க)

அவராண்ட காலம் களம்பறைச் சாதி
யடங்கி நடந்தது ஊரறியும்
இவராளுங் காலத்தில் கீழ்மேலாய்ப் போச்சுது
என்னென்று கேளடி ஞானப்பெண்ணே. (க௨௨)

கண்ணை யிமைமித்தங் காப்பது போல்நம்மைக்
காத்திரட் சித்த கருணைத்துரை
எண்ணிப்பா ரந்தத் துரைசாக யாழ்ப்பாண
மண்ணு மழுதகே ஞானப்பெண்ணே. (க௨௩)

புண்ணிய வான்செய்த நன்மை கணக்கிடப்
பூமியி லாராலுங் கூடாது
வண்ணமாய்ப் பாடிய ஜூபிலி கொண்டியை
வாசித்துப் பாரடி ஞானப்பெண்ணே. (கஉ௪)

எங்கள் டயிக்குத் துரைசாகும் போதவ
னெண்ணமெல் லாமிந்த மண்ணின்மேலே
அந்தக் குறிப்பை யறிந்த துரையூருக்
கெந்த நயஞ்செய்தார் ஞானப்பெண்ணே. (கஉ௫)

அந்தத் துரைசாக வொன்றின்பி னொன்று
யநேக பழுது வரவா மீறுது
எந்த வகைநாங்க ளீடேறு வோமென்று
யேங்குகு தேசனம் ஞானப்பெண்ணே. (கஉ௬)

அவர்காலம் செங்கோற் சிறப்பினு லேநன்மை
யங்கங்கே யெங்குந்தான் பொங்கிநடந்தது
இவர்காலம் வேதனை யொன்றின்பின் னொன்றாக
வேனோ வருத்துது ஞானப்பெண்ணே. (கஉ௭)

பருவகால மென்னு மாறுமந் நாளையிற்
பழுது செய்யாம லொழுங்காய் நடந்தது
மழையோ குறைவில்லை வேளாண்மை யும்மெத்த
மாமோக மானது ஞானப்பெண்ணே. (கஉ௮)

ஆண்டவன் நன்மையால் நல்ல துரைமார்க
ளப்போ விருந்தார்க ளிப்போ கிடையாது
நீண்ட மரம்போனல் நிற்கும் மரந்தான்
நெடுமர மாமடி ஞானப்பெண்ணே. (கஉ௯)

குருக்கள்மார் பட்சத்தி லாதனத் துக்காகக்
கூல்அப்புக் காத்துத் தொடுத்தபொய்ச் சாதன
வழக்குப்போல் முன்னு மறிந்ததுண் டோவந்த
வழுவைநீ பார்பின்னே ஞானப்பெண்ணே. (கஙo)

கூல்அப்புக் காத்துக் குழப்பத்தின் மேலே
கொழும்பி லிருக்கும் சனங்கள் சகலரும்
பேர்பெற்ற கள்ளர்தான் யாழ்ப்பாணத் தாரென்று
பேசுகி ரூரடி ஞானப்பெண்ணே. (கஙக)

முன்னாளி லேயெல்லா உத்தியோ கர்க்கும்
முகமன் மரியாதை யெல்லோருஞ் செய்குவர்
இந்நாளில் கச்சேரிப் பெரிய சிறுப்பவரை
யேனடித் தார்சொல்லு ஞானப்பெண்ணே. (க௱௨)

வெட்டிப்போட் டோரையும் விட்டோடு றார்சிலர்
வெகுமானி யைக்கூடக் கொலைசெய் கிறார்சிலர்
கட்டுறா ரோரையுங் காசினா லேயவர்
காலந்தா னோவிது ஞானப்பெண்ணே. (க௱௩)

கட்டி யடிப்பதை முற்றாக விட்டனர்
கள்ளர்க்கும் நல்ல கறிசோறு வைத்தனர்
துட்டர்க ளிப்போ சிறையி லிருக்கத்
தொடர்ந்து திரிகிறார் ஞானப்பெண்ணே. (க௱௪)

ஒக்றொடி எங்கள் றவைனந் துரையுடன்
உவாதிங்றன் நீதவான் றெசலிவ றெல்லாம்
தீர்க்கமா யந்த டயிக்குத் துரைமன
மேற்க நடந்தவர் ஞானப்பெண்ணே. (க௱௫)

நல்ல எசன்றுடன் நல்ல துரைமாரும்
நல்லவ ரான தலைமைமாரும்
சொல்ல முடியாத நன்மைசெய் தார்முன்னே
சோபன காலந்தான் ஞானப்பெண்ணே. (க௱௬)

அந்தத் துரைமார்க்குக் கோபம்வந் தாலது
அம்மட்டு மூருக்கு மெத்தலாபம்
இந்தத் துரைமார்கள் கோபங்கள் பாபமா
யெங்கும் விளையுதே ஞானப்பெண்ணே. (க௱௭)

அந்தத் துரைமார்கள் நன்மைகளு மூரை
யாண்ட சிறப்பு மொழுங்குகளும்
இந்தத் துரைமாருக் கில்லாமற் போனது
எங்கள் விதிதானோ ஞானப்பெண்ணே. (க௱௮)

கச்சேரி தன்னில் டயிக்கிருக் கும்போது
கைலாச மென்றூரார் சொல்லுவார்கள்
இப்போது அந்த வடிவு கிடையாது
இயங்குது ருத்திரம் ஞானப்பெண்ணே. (க௱௯)

நல்ல துரைமா ரிவர்களா லும்வெகு
நன்மைபெற் ருரிந்த வூரவர்கள்
சொல்ல முடியாது தற்கால வேதனை
சொல்வே னுழுங்காக ஞானப்பெண்ணே. (சசுo)

டயிக், பிறைஸ் காலம்
முற்றிற்று.

---

## கிப்சன், போல், மறை, மோவியு, றசல், றவைனம் இவர்கள் காலம்.

---

### விருத்தம்.

கனத்ததுரை மாரிருவர் காலம்நீங்கக்
கல்விகற்ற துரைமூவர் கடிதுவந்தார்
இனத்திலுள்ள றசலுமே சன்ருய்வந்தா
ரிவர்களர சொருவாறு வினிதுதோன்ற
மலத்திருள்போல் மோவியுவும் வந்தாரப்பால்
மன்னவனும் றவைனமுமே வந்துசேர்ந்தார்
குலப்பழிசெய் துட்டர்சிலர் வந்துவந்து
கூடினுர் மறநெறிகொண் டாடினுரே.

ஆயிரத் தெண்ணூற் றறுபதா மாண்டிலே
யந்தப் பிறைஸ்தன் சொந்ததே சம்போனுர்
பாவ மிவ்வூருக் கொருபுயம் போன
பழுதுபோ லாச்சுது ஞானப்பெண்ணே. (க)

அந்தத் துரைபோகப் பின்னுக வேமூன்று
சொந்தத் துரைநீத வான்களானுர்
முந்திவந் தார்கிப்சன் பின்னுகப் போல்த்துரை
மூதறி வுள்ளவர் ஞானப்பெண்ணே. (உ)

அவர்காளி லிங்கே சிலசில லோயர்மா
ராவலு டன்வந்து வேலை நடத்தினர்
பழுதும் பலனு மெவரெவ ராலென்று
பார்த்து அறிந்துகொள் ஞானப்பெண்ணே. (ங)

திருப்பாற் கடலைக் கடைந்த சமயந்
திரண்டெழுந்த பொருள்கள்போலே
யுதித்தாரே வந்து இரண்டப்புக் காத்துமா
ருவைமறுங் கூலுமாம் ஞானப்பெண்ணே. (ச)

தம்புவும் சாள்சுவும் பெஞ்சமீ னுமந்தச்
சங்கரப் பிள்ளை மயில்வாக னமிவர்
பங்கமில் லாமல் வழக்குக ளைமனப்
பற்றாய் நடத்தினார் ஞானப்பெண்ணே. (ரு)

மயில்வா கனமும் புலோலி யிருப்பிடம்
மாதத் தரைவாசி டிஸ்டிறிக் கோட்டிலே
பழுது வாராமலே யெந்த வழக்கையும்
படித்து நடத்துவார் ஞானப்பெண்ணே. (சு)

நல்லகு ணங்கல்வி வல்லபம் யோக்கியம்
நாளுந் தியானம் படிப்பின்மேலே
செல்வனுஞ் செல்வ முடையோ ருறவும்
சொல்ல வெளிதல்ல ஞானப்பெண்ணே. (எ)

வெளியாகச் சொல்லுநீ தம்பு தரணி
விதன மெவர்க்கேனுஞ் செய்ததுண்டோ
பழிபாவ மிரண்டிற்கு மஞ்சி நடப்ப
தெவரு மறிவார்கள் ஞானப்பெண்ணே. (அ)

இத்தனை பேரிலு முத்தம சற்குண
மெத்த வுடைய ரிரண்டுபேர்தான்
சுத்த மனந்தொழில் வீண்கதை கள்பேசி
யெத்தமாட் டாரவர் ஞானப்பெண்ணே. (கூ)

உள்ளன் பிலாமலே காசுக்காய் மெத்த
உருகி முகமன் சிலபேர்கள் பேசுவார்
கள்ளரை வெள்ளரைப் பேசுங் குறிகளிற்
கண்டாற் றெரியாதோ ஞானப்பெண்ணே. (கo)

கெபிரியற் பிள்ளை தரணியாய் வந்திங்கே
கெட்டித் தனமாய் வழக்கு நடத்தினர்
எவருக்கும் நல்ல மனுவதன் கனநா
ளிருக்காமற் போச்சுது ஞானப்பெண்ணே. (கக)

நீதவான் வேலையை விட்டந்தப் பேள்சலும்
நியாயங்கள் பேசுற லோயராய் வந்தனர்
ஆண்மையாய்ப் பேசுவர் பேசினா லுமவர்
மானங் குறைவுதான் ஞானப்பெண்ணே. (க௨)

நட்டார்போ லேயந்தச் செல்பித் துரையுட
னிட்டமா யெப்போதுங் கொண்டாடினார்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்கள் தான்சங்கு
சுட்டாலும் வெண்மைதான் ஞானப்பெண்ணே. ()

அறிஞன் மறைத்துரை ஜட்ஜாக வந்தன
ரதிக படிப்புங் குணமு முடையவர்
பலகால மிங்கே யிருந்தா சாளநாம்
பலன்செய்தோ மில்லையே ஞானப்பெண்ணே. (க௪)

அவர்போல் விளக்கமும் நியாயமுந் தீர்வையு
மாராய்வு முள்ள துரையுமுண்டோ
எவரும் வியந்தார்கள் சுப்பிரீங் கோடுர்ந்தா
னேற்றஜட் சென்றது ஞானப்பெண்ணே. (க௫)

இவர்நாளி லிங்கே தரணிமா ரெல்லாரு
மெந்த வழக்கையும் மெய்கண்டு ஏற்பார்கள்
பழுதான காலம் வரவரத் தீமைகள்
பாரமற் செய்கிறார் ஞானப்பெண்ணே. (க௬)

தரணியில் லாமற் பெரிய வழக்கையும்
தானாய் நடத்த விடங்கொடுத்தார்
பெரிய பழுதிப்போ தரணிவை யாதொன்றும்
பேச முடியாதாம் ஞானப்பெண்ணே. (க௭)

எந்த வழக்கையு மூரிற் சனம்வந்
திருந்தங்கே கேட்க விதயமானார்
அந்த வொழுங்கிப்போ சற்றுங் கிடையாது
அடித்துத் துரத்துறார் ஞானப்பெண்ணே. (க௮)

மன்னன் மறைத்துரை சாகவும் மோவியு
மகத்திற் சனிபோல வந்துசேர்ந்தார்
என்னென்று சொல்லுவேன் கூலப்புக் காத்துக்
கிருந்த மகத்துவம் ஞானப்பெண்ணே. (க௯)

கிப்சன் நல்லதுரை நாளையில் முத்துக்
கிட்டினர் சீமைக்குப் பட்டம் பெறப்போனார்
அத்தரு ணத்திலு வைமனைத் தான்சனம்
மெத்த விரும்பினார் ஞானப்பெண்ணே. (உ0)

நெல்லென்ற லோயர் குவீனப்புக் காத்துவாய்
நேயமு டன்சில காலந்தொ ழில்செய்தார்
வல்லவ ராகிய லோய மொழுங்கப்போ
வடிவா யிருந்தது ஞானப்பெண்ணே. (உக)

பட்டமும் பெற்றொரு பாரியை யுங்கொண்டு
பரிசுடன் முத்துக் கிட்டின ரும்வந்தார்
இட்டமா யாவரும் போய்மரி யாதையோ
டின்புகொண் டாடினார் ஞானப்பெண்ணே. (உஉ)

சுப்பிறீங் கோட்டுச் சிறப்புக்கா ணமோவியு
துரையம்மா வும்முத்துக் கிட்டின ரம்மாவும்
அக்களிப் போடந்தக் கோட்டி னிடமாக
எறிவந் தாரவர் ஞானப்பெண்ணே. (உஙு)

பெலத்த வழக்கிலே ஸ்றூவாட் டரசற்குப்
பின்னாகப் போயிரு பக்கமி ருந்தனர் [கக்
கொலெக்றிவ்கோடோவென்று பேள்சல்த்துரைகேட்
குலுங்கச் சிரித்தார்கள் ஞானப்பெண்ணே. (உச)

பெண்களைச் சிம்மா சனத்தி லிருத்தல்
பெரிய வரசற்குச் சங்கையல்ல
எங்களை யாண்ட துரைமாரு முன்னாளி
லிப்படிச் செய்தாரோ ஞானப்பெண்ணே. (உரு)

மோவியு நீதவான் முன்னாளி லேமெத்த
மோசமில் லாமலே நீதிந டத்தினர்
ஆனா லவரும்பின் னாலே வரவர
வதிக பழுதானார் ஞானப்பெண்ணே. (உசு)

கூல்புத்தி யைமெத்தக் கொண்டாடி னார்துரை
குறைவென்று முத்துக்கிட் டினரும்வெ றுத்தனர்
மாதிரி யாகச் சிலநாள் நடித்தொரு
காரியஞ் செய்தார்கேள் ஞானப்பெண்ணே. (உஎ)

இவர்க ளுடனே சிநேகம்போ லேநின்று
இதமாய் வழக்கை நடத்திவந்தார்
அதிககா லமிங்கே யில்லாமற் றானும்
வடகரை போனாரே ஞானப்பெண்ணே. (உஅ)

ஆயிரத் தெண்ணூற் றறுபத்தே ழாமாண்டு
அந்த டயிக்குத் துரைகால மும்போச்சு
சூரியன் போய்விழ மாலையாங் காலம்போற்
றோன்றினா ரேறசல் ஞானப்பெண்ணே. (உகூ)

சாதி மரபினி லுள்ள மனுஷர்க்குச்
சங்கை கொடுத்து நடத்திவந்தார்
பாவிக ளான குடிசன மேல்மனப்
பட்சமுங் காட்டினார் ஞானப்பெண்ணே. (௩௦)

கடமை வரியை மெதுவாக வாங்கினார்
கடுமை செய்யாமல் குடிமே லிரங்கினார்
கொடுமைசெய் வாரோ பெரிய குலத்தவர்
குணங்குலத் தால்வரும் ஞானப்பெண்ணே. (௩க)

ஊரவர்க் காயந்த றசல்த்துரை யுமப்போ
வுயர்ந்த வகைநெல் வருத்திக்கொ டுத்தனர்
சீரா யிருந்திங்கே நன்மைகள் செய்ய
வாயாமற் போச்சுது ஞானப்பெண்ணே. (௩உ)

கூல்கலி யாணம் முடித்தபோ துமோவியு
கூட்டமு டன்போய்ச் சடங்கு நடத்தினர்
ஆரைத்தான் விட்டது பாசவி னைகூலி
லன்பு துரைதானும் ஞானப்பெண்ணே. (௩௩)

எந்த வழக்கிலே கூல்வெளிப் பட்டாலு
மெப்படி யும்வெற்றி சந்தேக மேயில்லை
அந்த வகையாலே யூரிற் கனபணஞ்
சொந்தமாய் வந்ததாம் ஞானப்பெண்ணே. (௩௪)

பாரி லெவரும் வியக்கக் கனபணம்
பணச்சடங் குசெய்து சேர்த்ததுண்டு
சீரான காற்றது வீசக்கண் டால்விரை
யார்தூற்றார் சொல்லடி ஞானப்பெண்ணே. (௩௫)

சித்தஞ் சிறந்த டயிக்கு பிஸறசுக்குச்
சீராக வேழாண்டு பின்னே பிறந்திட
மற்றப் புயமு மிழந்த வகைபோல
வறுமை பிடித்தது ஞானப்பெண்ணே. (௩௬)

இந்தப் பிறைசு டயிக்கிவர் பின்னாக
வெத்தனே கேடென்று வெண்ணித்தான் பாரடி
அந்த முதலியார் கைக்கூலி வாங்கிய
ஆக்ஷேபம் வந்தது ஞானப்பெண்ணே. (௩௭)

கோட்டையிற் கூடிய கொம்மிசன் மாரிற்
குழப்ப மெழுந்து வழக்கு நடந்தது
கேட்டைச்செய் தார்கில்னர்ப் பாதிரி யாரென்று
கோட்டி விழுத்தாரே ஞானப்பெண்ணே. (௩௮)

ஊரிற் கலாதி யொருவாறு நீங்கவே
யுள்ளத்திற் கேடுள்ள கூலுந்தான் பாங்கரும்
சாக மருந்து குடித்தது போல்மரண
சாதனம் வந்தது ஞானப்பெண்ணே. (௩௯)

ஊரில் மனுஷர் குருக்கள்மார் பட்சமா
யுண்மையை ஸ்தாபிக்க வன்மம் பிடித்தனர்
நீதவான் கூல்பட்ச வாதமாய் நின்ற
தநீதமல் லோசொல்லு ஞானப்பெண்ணே. (௪0)

மோவியு நீதவான் கூலில கப்பட்டு
மோசமாய்ப் பொல்லாத துற்புத்தி யைத்தொட்டு
வேணுமென் றுசெய்த வம்பு வழக்கு
விளங்க நடந்தது ஞானப்பெண்ணே. (௪௧)

அந்த வழக்கிலே கொம்புங் கவருமா
யனேக வழக்கு முளைத்ததடி
சந்தேக மில்லைத் துரைசாக வந்தது
எந்தவி தஞ்சொல்லு ஞானப்பெண்ணே. (௪௨)

துரையை யடக்கவே வெட்டுங்கு ழிதன்னில்
தொப்பி யெறிந்துகூல் வீழ்ந்தழு தானும்
வெளியில் வெள்ளாடு நனையக்கண் டுவேங்கை
யழுத றிவாயோ ஞானப்பெண்ணே. (௪௩)

தான்படுங் கண்ணிக்கு நாள்வேலை கொண்டாற்போற்
சகுனப் பிழையாகத் தொப்பி யெறிந்தானே
யேன்பேசு வான்பின்னுற் பட்டது யர்களை
யெண்ணி முடியுமோ ஞானப்பெண்ணே. (சஞ)

கஞ்சற் பறங்கி முறைப்பாட்டி னலிரு
கனத்த மனுஷர் மறியலி ருந்தார்கள்
வஞ்சகர் செய்த கொடுமை நினைக்க
நெஞ்சு நடுங்குது ஞானப்பெண்ணே. (சரு)

மோவியு மற்ற மொறிச ணிவரெல்லாம்
மோக மனங்கொண்டு கூல்பட்சம் நின்றனர்
பாவங் குருக்கள்மார் பட்சத்துக் காய்க்கெல்லி
பழிவாங்கி னனடி ஞானப்பெண்ணே. (சசு)

சீவில் வழக்கை வெகுநாள் விளங்கியே
சிக்கெடுத் தாரந்த மோவியு நீதவான்
பாவிய வர்சாக நின்றது னைகாரர்
மாறிவிட் டாரடி ஞானப்பெண்ணே. (சஎ)

மோவியு நீதவான் செத்தவு டனே
மோர்க்கன் முதலாந் துரைமாரெல் லாங்கூடி
விவேகமுள் ளதுரை மேருசைம லைக்கொக்கை
விரைவா யனுப்பினர் ஞானப்பெண்ணே. (சஅ)

வந்தவு டனவர் சீவில் வழக்கை
வடிவாய் விளங்கத் துணிவுகொண்டார்
எந்த விதயோவப் பொத்தகங் கோட்டா
லெடுத்துப்போட் டானமே ஞானப்பெண்ணே. ()

அதிலும் பெரிய வழக்கொன்று வந்தது
அஞ்சாறு பேரிற் காவலி ருந்தது
வதிலான கொப்பியைத் தேடி யெடுத்து
வடிவாய் விளங்கினர் ஞானப்பெண்ணே. (ருo)

விளங்கியச் சாசனம் பொய்யென்று நல்ல
விரிவான தீர்வை தெளிவா யெழுதினர்
களங்கமில் லாச்சுப்பி றீங்கோடு மத்தீர்வை
கண்டு டெலப்பித்தார் ஞானப்பெண்ணே. (ருக)

சின்னாளி லேறசல் கண்டிக்குப் போய்விடச்
சிறந்த கவர்ண்மேந்தார் புத்திபண்ணி
மன்னாரே சன்று நல்ல துரையை
வரவிடுத் தாரடி ஞானப்பெண்ணே. (௫௨)

வந்த வுடனே துரைமார்க்குங் கூலுக்கும்
வாதுகள் மெத்தவும் வீறாய் நடந்தது
சிந்தை வறுமத்தால் கூடிய தத்துவம்
செலுத்தி யடக்கினார் ஞானப்பெண்ணே. (௫௩)

கூலுடன் சேர்ந்து நடந்த துரைமாருங்
கூசிக்கூ சிமனம் பின்வாங்கிப் போயினர்
காலப லன்தானோ றோசைம லைக்கொக்கு
கவனமாய் நின்றது ஞானப்பெண்ணே. (௫௪)

சீவில் வழக்கு முடிந்த வுடனே
சிக்கினா னென்று சிநேகித ரோடினர்
பாவியாங் கூலு மவனைச்சேர்ந் தோர்களும்
பட்டபா டுமெத்த ஞானப்பெண்ணே. (௫௫)

சங்கை யில்லாமல் மறியற் படுத்திச்
சமாதான மென்னும் வழக்கை விளங்கி
யிங்கே விளங்குதல் கூடாதென் றெண்ணி
யிழுத்தார் கொழும்புக்கு ஞானப்பெண்ணே. (௫௬)

இங்குள்ள நல்ல துரைமார் தரணிமா
ரின்னும னேக பிரபுக்க ளுங்கூட
வெங்கள் குருக்கள் பிராமணப் பிள்ளைமா
ரெல்லாரு மேகினர் ஞானப்பெண்ணே. (௫௭)

கெல்வித் துரையும் முதலியா ரும்ராகு
கேதுபோற் கூலை வருத்தினார்கள்
சொல்லுவ தென்ன முதலியா ரைமெத்தத்
தூற்றினான் கூலடி ஞானப்பெண்ணே. (௫௮)

கப்பல்விட் டந்தக் கடற்கரை வந்தது
கண்டானே கூலும் முதலியாரை
எப்படிச் சொல்லுவே னேசின வேச்சுக்கு
எல்லையு முண்டோடி ஞானப்பெண்ணே. (௫௯)

யூரியைக் கூப்பிடுங் தன்மையி லங்கோ
ருபாயத்தைக் கூலுக்காய்ச் செய்துவைத் தாரதை
நீதி யதிப னறிந்துபின் மாற்றின
நேர்மை யறிவாயோ ஞானப்பெண்ணே. (௬௰)

முதலப்புக் காத்துவாம் மோர்க்கன் துரையு
முடிப்புறம் நின்று வழக்கு நடத்தினர்
எதிரிகட் காயங்கு நின்றது டியசும்
இன்னுஞ் சிலருமாம் ஞானப்பெண்ணே. (௬௧)

குமாரசா மியந்தச் சேர்ப்பட்டம் பெற்றவர்
குணமா யிவர்க்குத் துணையாய்வெ ளிப்பட்டு
இருவருந் தங்களாற் கூடிய மாத்திரம்
வெகுரியாயம் பேசினர் ஞானப்பெண்ணே. (௬௨)

ஆர்பேசி னுமென்ன குற்றஞ்சுற் றமாமோ
அநியாயஞ் செய்தா லரசர்வி டுவாரோ
பாவிகட் காய்வந்த சாட்சிக ளெல்லாம்
பயந்துவிட் டாரடி ஞானப்பெண்ணே. (௬௩)

வரிசையாய் வந்த வெதிரிகள் சாட்சியில்
வங்கிச் சிருப்பு சரவண முத்துவைத்
தெரிய விலக்கின ரவ்வேலை பாராமற்
பெரிய பரிதாபம் ஞானப்பெண்ணே. (௬௪)

இந்தச் சிருப்புவின் காலத்திலே வங்கி
யிருந்த வடிவு மவர்குண நன்மையும்
வந்த சிருப்புவின் நன்மையுந் தீமையும்
வகுக்கிறேன் பின்னலே ஞானப்பெண்ணே. (௬௫)

கூடாத கூட்டங்கள் கூடலா காதென்று
குணமா யெவர்க்கும் பிதாமாதா சொல்லுவர்
பால்போல அன்னமுங் காகத்தைச் சேர்ந்தல்லோ
வீண யலைந்தது ஞானப்பெண்ணே. (௬௬)

சுப்பிறீங் கோட்டின் முதலா மதிபதி
சூழ்ச்சி யுடனே வழக்கை விளங்கியே
இத்தமா யந்த வெதிரிகள் மேற்றீர்வை
இட்டினர் கேளடி ஞானப்பெண்ணே. (௬௭)

முதலா மெதிரிக்கு ஆறு வருஷமும்
மூட்டின பேருக்கு நாலு வருஷமும்
வெளியான சாட்சிக் கிரண்டு வருஷமும்
விதித்தார் துரையடி ஞானப்பெண்ணே. (௬௮)

எம்பித் திரியு மெலிகள் கொழுத்து
விருக்கமாட் டாம லெதிராக வோடிப்
பாம்பைக்கொஞ் சிவிளை யாடப்போ னவொரு
பழங்கதை போலாச்சு ஞானப்பெண்ணே. (௬௯)

தலையி லிருந்து செவியைக் கடித்தாற்போற்
சண்டாள னான குழந்தைவேலன்
கொலைசெய் கோடாலியின் காம்புபோ லேநின்று
குடியைக் கெடுத்தானே ஞானப்பெண்ணே. (௭௦)

இட்ட முடையவன் கூல்மேலே சுப்பர்தா
னெத்தனை யோவழி மாறவி ருந்தது
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
யொட்டி யுலர்ந்தானே ஞானப்பெண்ணே. (௭௧)

ஆரென்ன பேசினு மாரைத்தா னோந்தாலு
மதிலொரு போதும் பலனுமில்லை
தானடா துசெய்தால் பாடு படவேண்டுந்
தப்பாது வையச்சொல் ஞானப்பெண்ணே. (௭௨)

பெரிய படைவீரன் வாளபி மன்படப்
புறங்கொடுத் தோர்கள் மகிழ்ந்துவந் தாற்போலச்
சரியாகக் கூலுக்கு அஞ்சிம றைந்தவர்
சந்தோஷ மாய்வந்தார் ஞானப்பெண்ணே. (௭௩)

வேதா விதியை விலக்குவா ருண்டோடி
விதியின் பயனே பயனென்று சொல்லடி
போதாத புத்தி மதிவந் துலைப்பது
பொல்லாத காலந்தான் ஞானப்பெண்ணே. (௭௪)

மூன்றுநாள் பின்னே முதலா மெதிரியை
மூவிரா சாக்களும் கூடிய ழைப்பித்து
வேண்டினார் சட்டையை யப்போதுங் கூல்தன்
வீரம்வி டவில்லை ஞானப்பெண்ணே. (௭௫)

எத்தனை பேர்கள் துரைமார் முதலாக
வெண்ணை முடியாத கேடுகள் செய்தனர்
இத்தனை வேதனை வந்தும் மனது
இளைத்தானோ கூலடி ஞானப்பெண்ணே. (எசு)

மானம் மருங்கு பணங்களும் போச்சுது
மறிய விருக்கத் தலையில் விதியாச்சு
ஈனமல் லோவேழைப் பார்ப்பார் பணத்துக்
கிவராசைப் பட்டது ஞானப்பெண்ணே. (எஎ)

## கோச்சகம்.

நூலுணர்ந்த நீதிமன்னன்
நொடிப்பொழுது மாறாச்செங்
கோல்நடத்தி யேழைக்
குடிசனத்தைக் காத்துவந்தான்
ஆரணங்கள் நீதிநெறி
யறத்துறப்புந் தானகன்று
கூல்வழக்கின் பின்னே
கொடுமைதலைப் பட்டதுவே.

---

ஊரிற் சனங்கள்மே லன்புகொண் டாடி
யுபகாரஞ் செய்த துரைமார்ம னமெல்லாம்
வேறுபட் டுநம்மைத் துட்டர்க ளென்று
வெறுக்கத் தொடங்கினார் ஞானப்பெண்ணே. (எஅ)

ஆதிபி தாமாதா முன்செய்த பாவத்தா
லதிக வருத்தம் படவிதி யாச்சுது
பாவிகள் துட்டர்செய் பாவத்தை யும்நாங்கள்
படவிதி யோசொல்லு ஞானப்பெண்ணே. (எகூ)

ஊரிற் சனங்களும் வந்து நெருங்காம
லெவ்வோ ரிடமுங் கிருதிகள் மாட்டினர்
பாரி லாபீசு நடத்துமி டந்தோறும்
பந்தனஞ் செய்தார்கள் ஞானப்பெண்ணே. (அ௦)

அத்துவக் காத்தே களவுசெய் தாற்பின்ன
ராரைத்தான் சுத்தமா யெண்ணுவார்கள்
சற்று மதியாமல் லோயர்ப லரிலுஞ்
சந்தேகங் கொண்டனர் ஞானப்பெண்ணே. (அ௧)

பிசுக்காற் சேவகன் கள்ளறிப் போட்டாற்
பெரிய பழுதொரு ஒற்றையைக் காண்கிலர்
அடுக்காகப் போன வழிபார்த்த போதது
அண்ணனின் தம்பியாம் ஞானப்பெண்ணே. (அ௨)

சேவக னுமந்த வேலைபா ராமலே
தேசாந் திரியாக வூர்விட்டு ஓடினன்
ஆன படியினா லந்த வழக்கு
மமர்ந்துதான் போச்சுது ஞானப்பெண்ணே. (அ௩)

றெக்கோட்டை மெத்த வறுக்கையில் வைத்தன
ரெங்கும் தரணிமார் போகாமற் செய்தனர்
பொய்க்காரர் செய்த கொடுமையி னல்வந்த
பொல்லாப்புக் கொஞ்சமோ ஞானப்பெண்ணே. ( )

பெருமித மான மழைபெய்து விட்டாற்போல்
பெரிய கலாதி யொருவாறு நீங்கிற்றுச்
சிறிய மழையையுஞ் சீகர மும்போலச்
சீர்கேடுண் டானது ஞானப்பெண்ணே. (அ௫)

இத்தத்தரு ணமிரண்டு நல்லோயர் மார்க
ளின்னுமிவ் வூரிலே வந்துதொ ழில்செய்தார்
அந்திமா னுத்த பிறிற்றேவாம் மற்ற
தளகைக்கோ னுமடி ஞானப்பெண்ணே. (அ௬)

பிறிற்றே நல்ல லோயரிவ் வூரிலும்
பெரிய வழக்கானு லேற்பட்டுப் பேசுவ
ரெவர்க்கா யிருந்தாலு மேற்பட்ட காரியம்
இலேசில் விடாரடி ஞானப்பெண்ணே. (அ௭)

அத்துவக் காத்து அளகைக்கோன் பேச்சி
லதிக வடிவு தெளிவான பாஷையும்
சித்திர மும்பேசுஞ் சத்தமும் நல்ல
சிறப்பா யிருக்குமே ஞானப்பெண்ணே. (அ௮)

தந்திர யுக்தியும் வாக்கு வடிவும்
சமர்த்தாய் வழக்கு நடத்துஞ் சிறப்பும்
எந்த விதமுந்தான் வெல்லுந் திறத்தையே
யெண்ணி நடத்துவார் ஞானப்பெண்ணே. (அகூ)

எல்லியற் றென்ற துரையுஞ் சிலநா
ளிருந்தார் பொலீசுக்கு நீதவா னாகியே
வல்ல நிபுணன்று னாரவர்க் கும்வெகு
நல்லவ ராமடி ஞானப்பெண்ணே. (கூ0)

செல்பித் துரையுஞ் சிலகால மிங்கே
சிறப்பாய் வழக்கு விளங்கிவந் தார்
சொல்லவும் வேண்டுமோ நல்லலோ யருடை
பிள்ளையல் லோவவர் ஞானப்பெண்ணே. (கூக)

ரோசைம லக்கொக்கின் காலத்தி லேயந்த
யோன்புலி ராச சிங்கமு தலியார்
பேரான பென்சனைப் பெற்றுபின் றூரப்பால்
பேரின்பம் பிள்ளையாம் ஞானப்பெண்ணே. (கூஉ)

மித்தியா வாத நிரசனத் திற்சொன்ன
மேலான கல்வி சிறந்த முதலியார்
இத்தலத் தில்நல்ல சாதிரா னென்று
றிலங்கையர் பேரடி ஞானப்பெண்ணே. (கூங)

சரந்துரை யும்பின்னே ஜட்சாக வந்தனர்
தன்னபி மான மதிகமடி
இருந்து விளங்மாமல் மத்திட்ச மானாற்
குளிர்ந்த மனமல்லோ ஞானப்பெண்ணே. (கூச)

எந்த வழக்கையும் மத்திட்ச மாக
வெளியில் விடுவார் முதலியா ரல்லாமல்
அந்த வகையால் முதலியா ருக்கு
மதிக வருமானம் ஞானப்பெண்ணே. (கூரு)

செட்டி வழக்கிற் சரந்துரை நாளையிற்
றீர்வையு மொன்று களவாகப் போனது
துட்டர்கள் வந்து திருட முடியுமோ
சோற்றுச் சரைப்பூனை ஞானப்பெண்ணே. (கூசா)

உதாஜிங்ரன் நீதவான் நல்லது ரைவழக்
குண்மை யறிந்து பிடிக்கக் கண்டாயோ
கலாதி கொடுமை யடக்காவி டிலென்ன
லாபத் துரையாலே ஞானப் பெண்ணே. (௯௭)

உதாதிங்ரன் நீதவான் காலத்தி லேயிவ
ருயர்ந்தபட் டம்பெற்ற நியாயந்தெ ரியுமோ
மகாகுண வானரு ணாசலம் பட்டத்தை
மாற்றினா தாமடி ஞானப்பெண்ணே. (௯௮)

ஒழுக்க முயர்குல மல்லாது வேறில்லை
வுத்தியோ கத்திற் குலகும மையாது
செருப்புக்கு நல்ல வைரம்ப தித்தாலுஞ்
சிரசில ணிவாரோ ஞானப்பெண்ணே. (௯௯)

வாய்ச்சால முள்ள முதலிமெய்க் காளன்
வடிவா யெவர்க்கும் விளங்கத் தமிழ்சொல்வார்
பேச்சிலும் வல்லவர் பாதிரி யாகப்
பிரசங்கஞ் சொன்னாரே ஞானப்பெண்ணே. (க௦௦)

கீழ்க்கோட்டுச் சக்கிடுத் தார்களி லேநல்ல
கெட்டிக்கா ரனந்த வார்அப்புக் குட்டியும்
தீர்ப்பாய்த் தமிழிலே செய்யுட்கள் பாடுற
சித்திய முண்டடி ஞானப்பெண்ணே. (க௦க)

முதலியா ராகத் தொழிலும் நடத்தின
ரொருவரும் வியக்குந் தமிழ்ப்பாஷை பேசினார்
துரைமார் முதலா யவர்பேசும் பாஷையில்
மனசு மகிழ்வார்கள் ஞானப்பெண்ணே. (க௦உ)

கோப்கின்ஸ் பாஷையைச் சுப்பிரீங் கோட்டுத்
துரையாக வந்த பேரிக்கும் வியந்தனர்
அய்க்ரிங் முதலியா ராகப் பலநா
ளவரும் நடத்தினார் ஞானப்பெண்ணே. (க௦௩)

முதலிமார் கல்வி குணம்சங்கை யெல்லாம்
முடிவாக விரண்டாம் பதிப்பிலே கண்டறி
வரையறை யாகிய சக்கிடுத் தாரின்
வரிசையைக் கேளடி ஞானப்பெண்ணே. (க௦௪)

வேறு மொருவர் இறினியர் பின்வந்தார்
விந்து வழிதான் துரைகுலமாம்
போது நோரான் காரிய சித்தி
பெருத விசாரனும் ஞானப்பெண்ணே. (௧௦௫)

அவர்பின்னே வந்த சக்கிடுத் தார்வெகு
அருமையு டனல்ல வேலை றிந்தவர்
குலமுங் குணமும் படிப்பு முடையவர்
குரேசியர் போடி ஞானப்பெண்ணே. (௧௦௬)

நீதிவான் கள்மெச்சும் சக்கிடுத் தாரவர்
நித்திய வேலை திலுவைவையார்
ஆரென்று வுஞ்சரி யந்தந்த வேலைகள்
சீராய் முடிப்பாரே ஞானப்பெண்ணே. (௧௦௭)

நாழிகை யிற்கண வேலைசெய் வாரிந்த
நாட்டிற் சனங்கள் குணமறிவார்
பாவிக ளானலுங் கீழுத்தி யோகரைப்
பழுதற டுத்தாரே ஞானப்பெண்ணே. (௧௦௮)

மெத்தநா ளிவ்வூரில் வேலைபார்த் தஅவர்
வெகுசம்ப ளத்துடன் காலிக்குப் போயினர்
மித்திரர் சுற்றம் பலரு மிரங்கச்
செத்துவிட் டாரங்கே ஞானப்பெண்ணே. (௧௦௯)

வில்சிங்க ரென்றொரு சக்கிடுத் தாரிப்போ
வேலைக ளேற்று நடத்துகிறார்
நல்லவ ரானுலும் வேலை டிவைநான்
சொல்லவும் வேண்டுமோ ஞானப்பெண்ணே. (௧௧௦)

வில்சிங்க ரம்மாவும் தத்துவம் பெற்று
வேண்டிய முத்திரை விற்றுவருகிறார்
நல்ல பிழைப்புத் தரணிமா ருமிதை
நாடுவ ரோவினி ஞானப்பெண்ணே. (௧௧௧)

எந்தவூ ருக்கு மிதுபுதி தாமடி
இவ்வூர் கிலாபத்தில் முன்னேயும் விற்றதாம்
அந்தவு ரித்தாலித் தத்துவம் பெற்றது
மலமான மல்லவோ ஞானப்பெண்ணே. (௧௧௨)

லோஸ் கிறீனியர் இரண்டுகி ளாக்குமுன்
னுயர்ந்தநல் வேலைகள் பெற்றங்கே போயினர்
மாறிப்பின் வந்தது ரூச்சரும் போல்ச்சுமாந்
தீமையில் லாதவர் ஞானப்பெண்ணே. (௧௧௩)

அவர்க்குப்பின் னாகவே வந்தார் விசுவப்பா
வவருஞ் சிலநா ளிருந்தபின் மாறினர்
எவர்க்கு முபகாரி கந்தையா விப்போ
தேற்று நடத்துறார் ஞானப்பெண்ணே. (௧௧௪)

வேலை யொழுங்காய் முடிக்கத் தகுந்தவர்
வெகுநாள் டிசுக்காவின் வேலைப யின்றவர்
நாளையென் றெண்ணாமல் வேலைக ளந்தந்த
நாளில் முடிக்கிறார் ஞானப்பெண்ணே. (௧௧௫)

அடுத்த கிளாக்கந்த ஆறுமு கம்பிள்ளை
வமைதியு டன்புத்தி யாகந டத்துவர்
எடுத்த கருமங் கெடுதலில் லாம
லினிது முடிப்பார்கள் ஞானப்பெண்ணே. (௧௧௬)

றெக்கோட் கீப்பர் பௌடுவி னுந்தமி
ழெழுதுங் கிளாக்கு சலமோனுஞ் சீனியர்
தக்க வொழுங்காய்ச் சனங்கள் பலருக்குந்
தயவாய் நடப்பார்கள் ஞானப்பெண்ணே. (௧௧௭)

நாலுபேர் சேவகர் மூன்றுபே ருய்மெத்த
நல்லகு ணஞ்சொன்ன எவல்கேட்பார்
வால்தலை காட்டும் விலாங்குபோ லேயொரு
வங்கணு முண்டடி ஞானப்பெண்ணே. (௧௧௮)

சுற்றுக்கோட் டின்துரை மாரொழுங் கிப்போ
ஆட்ச மொருவர்தான் ரெண்டுகோட் டுத்துரை
மற்றுந் தொழில்களு மப்படி யப்படி
மானங் குறையுது ஞானப்பெண்ணே. (௧௧௯)

ஊர்காவற் றுறைக்கோட்டி னீதவா னான
உவைமன் றுரையைப் பலரும் வியக்கிறார்
ஆனா லவரும் நம்மூரின் வழமை
யறிந்த துரைதானே ஞானப்பெண்ணே. (௧௨0)

சாத்திரம் நூல்டல கற்று உணர்ந்தவர்
சந்தேக மில்லை யறத்துறப் புள்ளவர்
கோத்திரத் தாலுங் குணத்தாலும் யாதுங்
குறையில்லைப் பாரடி ஞானப்பெண்ணே. (௧௨௧)

திசைவீர சிங்கம் சிலகா லிருந்திங்கே
சீராய் வழக்கு நடத்திவந்தார்
மனமாயிவ் வூரிலும் மட்டைக் கொழும்பு
வெகுமான மாச்சுது ஞானப்பெண்ணே. (௧௨௨)

சங்கரப் பிள்ளையுந் தம்புவும் பின்னே
சாந்துரை சொன்ன கருத்தின் படிசென்று
சங்கையா னசுப்பிறீங் கோர்ட்டின் தரணியாய்த்
தத்துவம் பெற்றனர் ஞானப்பெண்ணே. (௧௨௩)

முன்சொன்ன நல்ல தரணிமார் தம்முடன்
மூத்தவ ராமப்புக் காத்துமா ருஞ்சேர்ந்து
என்சொல்லு வேன்சில காலம்ப ணந்தேடி
யெக்களித் தாரடி ஞானப்பெண்ணே. (௧௨௪)

பின்னே வரவர லோய ரொழுங்கு
பெரிய பழுதன்றி நன்மை சிறிதில்லை
சொன்னல்வெ றுக்குமா றலுஞ் சிலது
சொல்லுறேன் கேளடி ஞானப்பெண்ணே. (௧௨௫)

இன்னோர் தரணி எழுபதா மாண்டிலே
யிவ்விடம் வந்து வழக்கு நடத்துறூர்
அன்னவர் நாமமும் அல்பிறற் கென்ஸ்பன்
நன்னய முள்ளவர் ஞானப்பெண்ணே. (௧௨௬)

கோர்ட்டு வழக்கு நடத்துந் தரணிக்குக்
குணமான வீரந் துணிவுவேண்டும்
சூட்டுக்கல் லாலந்த வெண்ணெயு ருகாது
சொல்லுறேன் கேளடி ஞானப்பெண்ணே. (௧௨௭)

ஓர்மத்துக் கிந்தத் தரணியைப் போலிங்கே
யுள்ள தரணி யொருவரில்லை
கோபத்தை யும்பியாய வினைத்தை யுஞ்சற்றுங்
கொள்ளமாட் டாரவர் ஞானப்பெண்ணே. (௧௨௮)

துரைமீது நியாயத் தவறுகண் டாலுடன்
சோர்ந்தபக் கம்போய்ச் சேர்ந்துகொள்வார்
நீதிவரா வானாலும் வாராதி ருந்தாலும்
நியாயம்பா ராட்டுவார் ஞானப்பெண்ணே. (கஎகூ)

துரைகோப மானாலு மஞ்சமாட் டார்நியாயஞ்
சோரவி டாதங்கே பேசிக்கொள்வார்
மறுபேர்கள் காசையும் வாங்கிக்கொண் டுதுரை
மானம் விரும்புறார் ஞானப்பெண்ணே. (கஅ0)

ஒப்பனை சொல்லுறேன் சாவகச் சேரியி
லொருநாள் துரையோ டெதிர்நியாயம் பேசினர்
சிவ்றன்று ரைகோபங் கொண்டது கண்டாற்
சிரிப்பாயடி யங்கே ஞானப்பெண்ணே. (கஅக)

செம்பிய மொன்று காணிபு பகாரி
சீராய்க் கிறிமில் வழக்கு நடத்துவர்
சோம்பறை யில்லாமல் வேலைக ளொவ்வொன்று
மாம்படி செய்குவார் ஞானப்பெண்ணே. (கஅஉ)

அருமை யுடைய தாணிபொன் னம்பல
மன்பான பிள்ளையும் சற்குணனும்
தெரியாமற் போச்சுது கண்க ளிரண்டுந்
தெய்வச் செயலடி ஞானப்பெண்ணே. (கஅங)

கண்கெட்டுப் போனாலுஞ் சுற்றவித் தைபேசிக்
காசு உழைக்கிற வாசைகொண் டுஅவர்
பின்புந்தன் தத்துவம் தானே புதிப்பித்த
பேதமை கண்டாயோ ஞானப்பெண்ணே. (கஅச)

தூரட்சி யெழுதிக் கொடுத்தார் கொனலித்
துரையு மதனைப் பெறுகென்று தள்ளினர்
அரத்த மதிக மிருந்தாலு மாசை
யகலுமோ சொல்லடி ஞானப்பெண்ணே. (கஅரு)

ஆத்தும லாபத்தைப் போற்றிப் பெறுதற்கு
வையா வீதுவே சமயமென் றெண்ணியே
தீர்த்தங்க ளாடிச் சிவாலயஞ் சுற்றாமல்
திரவியம் வேண்டுமோ ஞானப்பெண்ணே. (கஅசு)

பாபஞ்செய் யாரந்தப் பென்ஷர்தானி
பதமைக் குணர்தான் பெருமையில்லை
வாய்வல் லபமும் வருமான முஞ்சூட்சம்
வறுமையிற் செம்மைதான் ஞானப்பெண்ணே. (௧௫௭)

பொன்னுச்சா மியந்த லோட்டன் தாணியும்
பூநிற மல்லாது வாசமில்லை
சின்ன வழக்கையும் பேசி நடத்தநா
மின்னமுங் காணேமே ஞானப்பெண்ணே. (௧௫௮)

காப்பென்ற ரொங்கச் சனங்களி டத்திலுங்
காசைக் குறித்து நெருக்கமாட்டார்
பூக்களி லேவண்டு தேனைக்கு டித்தாற்போற்
பொறுமையாய் வாங்குவார் ஞானப்பெண்ணே. (௧௫௯)

மல்லா கத்தி விருப்பவ ராமந்த
மயில்வா கனமுந் தாணியாய் வந்தனர்
நல்ல மனுஷன் நல்லகு ணங்குற்றஞ்
சொல்லா ரொருவரும் ஞானப்பெண்ணே. (௧௬0)

சீக்கிலா சுமற்றச் சுப்பிர மணியரும்
நிதமுந் தொழிலப் பருத்தித் துறையிடம்
பார்க்கலா மிங்கேயும் வால்வெள்ளி போலே
பரிமாறு வாரவர் ஞானப்பெண்ணே. (௧௬௧)

பிறவுண்டி நீக் கென்னுந் தாணி வழக்குகள்
பேசவேண் டாங்கன காசப டைத்தவர்
தூரந்தெந்த வேலையும் வாங்கி நடத்திற்
சுகமறி யேனடி ஞானப்பெண்ணே. (௧௬௨)

இந்தப் பருவம் சிலசில லோயர்கள்
சொந்தம தாயிந்த வூரிற்பி றந்தவர்
வந்து வழக்கு நடத்துகி றாரதைப்
பந்தமாய்க் கேளடி ஞானப்பெண்ணே. (௧௬௩)

கனகச பையென்ற அப்புக்காத் தும்நல்ல
கனவான் குணவா னடக்க முடையவர்
நயமான கல்வி யெவர்க்கும் மரியாதை
நியாய முணர்ந்தவர் ஞானப்பெண்ணே. (௧௬௪)

சாதி மரபிற் சிறந்தவர் தானவர்
சன்மார்க்க மான நடையை யுடையவர்
ஆரும் மதிக்கு மாதன வானதற்
கையநீ யெண்ணுதே ஞானப்பெண்ணே. (கசரு)

நாகலிங் கம்கற்று லோயாராய் வந்தவர்
நல்ல குணமதி லையமில்லை
வாரம தாய்நல்ல நியாயந் தெளிந்து
வீரமாய்ப் பேசுவார் ஞானப்பெண்ணே. (கசசு)

தேசவ ழமையும் நியாயமுங் காட்டித்
தெளிவாகப் பேசி வழக்கு நடத்துவர்
ஆனலெ வருக்குங் கூடிய நன்மைகள்
தானுகச் செய்வாரே ஞானப்பெண்ணே. (கசஎ)

வூரா ரினத்தவ ரெந்தச்ச னத்தினு
முள்ளன்பு கொண்டு நடக்க மனமுண்டு
பேரான விக்டோறியா லைபிரே ரிவைத்த
பெருமை யுடையவர் ஞானப்பெண்ணே. (கசஅ)

இந்துவைறு ஸ்கூலுக் கிவரே மனேசரா
மெத்தனை யோபிள்ளை நித்தம் படிப்பவர்
அந்த உபாத்திமார் பிள்ளையெ லாமெல்லாஞ்
சொந்தம்போற் பார்க்கிறார் ஞானப்பெண்ணே. (கசகூ)

காரிப்பிள் ளைநல்ல லோயா வர்முன்னே
காட்டுப்ப குதிமன் ஞரிந்ப ரீக்ஷையாம்
ஆசையாய் யாழ்ப்பாணத் தேசத்தில் வந்தபின்
மான மதிகந்தான் ஞானப்பெண்ணே. (கரு0)

நியாய நுணுக்கங்கள் புத்தியா லோசனை
நல்ல முகமன் வழக்கிலே யோர்யாம்
சாதனை யுந்தக்க போதனை யெல்லாஞ்
சரியாய் நடக்குது ஞானப்பெண்ணே. (கருக)

நல்ல மனுவேந்ன் நல்ல வருமானம்
நாடோறும் வேலை நடந்துவரும்
வெல்ல முடியா வழக்கென் றறிந்தாலும்
நல்ல வழிசொல்வார் ஞானப்பெண்ணே. (கருஉ)

கதிரவே லென்னுந் தரணியு டன்கூட்டுக்
கச்சவ டம்போல் நடத்துகிறார்
இருவருஞ் சேர்ந்து நடத்துந் தொழிலுக்
கிடையூறு வாராது ஞானப்பெண்ணே. (௧௫௩)

சேஞைதி ராஜா தரணியாய் வந்தனர்
தெளிவான சுத்த இதய முடையவர்
ஆஞை விதற்கேற்ற தந்திர யுத்திகள்
போதாது தானடி ஞானப்பெண்ணே. (௧௫௪)

ஆணை லென்றொரு லோயரும் வந்தன
ரதிக பழக்கம் வரவரக் காணலாம்
நீத முடையவர் சாது குணநயந்
தோனுமோ சொல்லடி ஞானப்பெண்ணே. (௧௫௫)

பந்த முடைய தரணி நிரையிற்சம்
பந்தரும் லோயராய் வந்து குதித்தனர்
சிந்தனை யோடு வழக்கு நடத்திஞல்
நிந்தை வாரதடி ஞானப்பெண்ணே. (௧௫௬)

தப்பையா கூக்கும் தரணியாய் வந்தனர்
சரிபிழை கண்டு வழக்கு நடத்துவர்
நம்பிக்கை பார்த் யவர்க்குமே லேயொரு
நல்லவ ருண்டடி ஞானப்பெண்ணே. (௧௫௭)

விசுவநா தர்சின்னக் குட்டியு மிங்கே
வெகுநாள் தரணியாய் வேலை நடத்தினர்
அனைவர்க்கும் நல்லவ ராஞலு மாயுசு
அற்பமாய்ப் போச்சுது ஞானப்பெண்ணே. (௧௫௮)

தெல்லிப் பழையிற் றரணிசின் னத்தம்பி
தெளிவு தமிழிலே பாஷைக் குறைவுதான்
வல்லமை யாகப் பிறவூர்க ளிற்சென்று
வருமானஞ் செய்தனர் ஞானப்பெண்ணே. (௧௫௯)

விசுவ லிங்கமுந் தரணியாய் வந்தனர்
வெட்கம் பயம்ரெண்டு மில்லாமற் பேசுவர்
பெரிய தரணியாய்ச் சுப்பிரீங் கோட்டிலும்
பேசக் கண்டாயே ஞானப்பெண்ணே. (௧௬௦)

கனக ரத்தினம் லோயராய் வந்ததும்
கல்வியும் பாஷையும் நல்ல குணங்களும்
பலருக்கு மேற்க நடந்தும் விதியின்
பயனே பயனுச்சு ஞானப்பெண்ணே. (கசுக)

காசுச் செட்டியார் லோயராய் வந்ததும்
கனா ளொழுங்காய் வழக்கு நடந்ததும்
ந்தவா னுன சரத்தோ டெதிர்த்ததும்
ியறி வாயோடி ஞானப்பெண்ணே. (கசுஉ)

எத்தனை வேலைகள் மெத்த நடந்தாலும்
சுத்த குணமே துலங்கவேண்டும்
சத்திய மாகிய உண்மைபா ராதவர்
கற்றவ ரோசொல்லு ஞானப்பெண்ணே. (கசுந)

தேடுந் திரவியங் கூட வருமோடி
செல்வச் சிறப்பினுல் நன்மையு முண்டோடி
பாடுபட் டாத்தும நன்மைதே டாமலே
பாபந் தேடலாமோ ஞானப்பெண்ணே. (கசுச)

ஆகா வாய்நல்ல வுண்மை வழக்கிலே
யானமட் டும்புத்தி கொண்டுசெய்தால்
பாபங்கள் வாராது பொய்வழக் காலென்ன
லாபம்நீ சொல்லடி ஞானப்பெண்ணே. (கசுரு)

எந்த வழக்கிலு யேற்பட்ட பக்கத்துக்
கியன்ற உதவி பலபல செய்தவர்
அந்தம தானுலுங் கள்ளர்க் குதவி
யதிக பழுதல்லோ ஞானப்பெண்ணே. (கசுசு)

கெட்டிக்கா ரனென்ற பேரொன்று போதுமோ
கெட்ட நரகத்திற் காளாக வேண்டுமோ
மட்டிகள் கெட்ட பணவாசை யாலுரில்
திட்டேற்கி முர்சிலர் ஞானப்பெண்ணே. (கசுஎ)

சார்துரை காலத்தில் தப்பு தாணிக்குச்
சந்தோஷம் லாப மதிகமென்பார்
சிறந்த குணங்கண்டால் நல்ல துரைமாருஞ்
சேராரோ சொல்லடி ஞானப்பெண்ணே. (கசுஅ)

கவர்ண்மேந் தரணியா யேற்பட்ட பின்பு
கவன மதிகம் கவர்ண்மேந்தின் காரியம்
துரைமார் குடிக ளிருவருக் கும்நல்ல
நிலையாய் நடத்துறார் ஞானப்பெண்ணே. (௧௬௯)

சமாதான வேலைகள் பார்க்கும் படிக்கொரு
தத்துவ மிப்போது தம்புமேற் சூட்டினார்
வெகுமான மாகிய அப்புக்காத் துமாரை
விரும்பாத தென்னடி ஞானப்பெண்ணே. (௧௭௦)

சங்கரப் பிள்ளை பொறுமை யதிகம்
தகுதி யுடையவர் பாஷையில் வல்லவர்
வெம்பும் படிக்கொரு நாளுஞ் சனங்களை
வேதனை செய்யாரோ ஞானப்பெண்ணே. (௧௭௧)

உவில்மட்டு நாளையிற் செம்பியற் குநல்ல
உபயோக மென்றப்போ பேசிக்கொண்டார்
குயின்மொழி யேகேளாய் காலந்தேங் காய்க்குள்
கூடு மிளநீருஞ் ஞானப்பெண்ணே. (௧௭௨)

பென்சமீ னுமந்தச் செம்பினுஞ் சற்றும்
பிசகாமற் சீழ்க்கோட்டில் நின்றுகொள்வார்
மூர்த்திச் சனமு மவரைத்தான் தேடுது
முதுசொமோ கேளடி ஞானப்பெண்ணே. (௧௭௩)

கவலையில் லாமலே நல்ல தரணிமார்
கனபணம் முன்னாளில் தேடிக்கொண்டார்
தலைவிதி தான்சிலர் தண்ணீரில் லாமலே
சந்தனந் தேய்க்கிறார் ஞானப்பெண்ணே. (௧௭௪)

இரண்டுகை யாலும் பணம்வாங் கிறதொன்று
இப்போ சிலரிற் கதைகள் பரம்புது
இரந்து திரிந்தாலு மிந்த வபகீர்த்தி
யேற்பாரோ நல்லவர் ஞானப்பெண்ணே. (௧௭௫)

மூத்திரை யைச்சிலர் கூட்டியும் வாங்கிறார்
மோசமாய்த் தண்ணீருள் முன்னைப்போல் வைக்கிறார்
சூத்திர ருள்ளமுங் கத்திரி போலதைக்
கொண்டாடிப் பாரடி ஞானப்பெண்ணே. (௧௭௬)

சின்னத் தாணிமா ரப்பவே லைதன்னைச்
சிலசில வேளை யெழுதுவித்தும்
இல்லைவி டுகாசு நாளைப்பார்ப் போமென்று
ஏமாற்று கிறாரே ஞானப்பெண்ணே. (௧௭௭)

முன்னே தாணிமார் தங்கள் கிளார்க்குக்கு
முழுதும் செலவுக் கவரோகொ டுத்தனர்
பின்னே சிலர்கச வஞ்சித்த னங்களைப்
பேசவாய் கூசுது ஞானப்பெண்ணே. (௧௭௮)

சேமஸ் என்னுந் தாணி யொருமுறை
கிறியில் வழக்கி லெதிரிக்கா யேற்பட்டுக்
காசையும் வாங்கிப்பின் வாராமல் விட்டது
கண்டா ரொலீவன்றும் ஞானப்பெண்ணே. (௧௭௯)

அப்போ தவர்சொன்ன வார்த்தை யறிவாயோ
அவருஞ் சிலநாள் தாணியாய் நின்றாராம்
எப்படி யுங்கெட்ட சீவிய மாயிது
இவர்க்கு நரகமாம் ஞானப்பெண்ணே. (௧௮௦)

தாணி பரிகாரி யிருவர் பிழைப்பையுஞ்
சாத்திரங் கள்மெத்தக் குற்றமாய்ப் பேசுது
அதிலும் சிலர்பல புண்ணிய முண்டென்று
ஆட்சேபஞ் செய்கிறார் ஞானப்பெண்ணே. (௧௮௧)

ஆபத்தின் மேலந்தச் சீவன மென்ப
தறிவாளி கள்சொல்லு குற்றமடி
பாபத்தின் மூலம் பணத்தி லிருக்குது
பாரதைப் புதிதாய் ஞானப்பெண்ணே. (௧௮௨)

முத்துச் சாமிக்கும் முதலியா ருக்கும்
மூண்ட வழக்குக்கு மூலம றிவாயோ
எத்தனோ பொய்யனோ வென்றிவர் பேசின
வேச்சாலே வந்ததாம் ஞானப்பெண்ணே. (௧௮௩)

நட்டத் துரட்சியு மையாயி ரரூபா
நல்ல தாணியுங் கெண்சுட மாமடி
அட்டிசெய் யாம லுடனே யெழுதி
பணைத்தாரே கோட்டிலே ஞானப்பெண்ணே. (௧௮௪)

அய்யா முதலி யறிந்து பயந்து
அனேக மனுஷரைக் கண்டுபின் சென்று
மெய்யாக வந்த வழக்கை யிணக்கி
விடும்படி கேட்டாராம் ஞானப்பெண்ணே. (கஅ௫)

நீதவா னெங்கள் கொனலித் துரையும்
நியாயப பிரமாணங் கண்டு தெளிந்து
போதிய நியாய மெழுதித் தாட்சி
பெறுதென்று தள்ளினார் ஞானப்பெண்ணே. (கஅ௬)

அப்பல் கொடுத்தா னுடனே வழக்காளி
யதற்கும் முதலி மனது நடுங்கிக்
கைப்பரி சாகவே மூப்பது ரூபா
காசு கொடுத்தாராம ஞானப்பெண்ணே. (கஅ௭)

கூலிவாங் கித்தொழில் செய்பவ ரோநல்ல
சாலி கமத்தொழில் செய்பவரோ
சில முடையோ ரிவர்களி லாரென்று
வளரிலே கேளடி ஞானப்பெண்ணே. (கஅஅ)

உடுப்பிட்டி சொந்தம் சிதம்பரப் பிள்ளையே
வலாந்தா மாரில் சிறந்த வறிவுதான்
சடுத்த மொழிபேசார் பிள்ளை பலருக்குக்
கற்றுக் கொடுத்தாரே ஞானப்பெண்ணே. (கஅ௯)

எங்கள் பிறைசுத் துரையு மிவரை
யதார்த்த முடையவ ரென்று எழுதினார்
சங்கை யுடனவ ருண்மை வழியிலே
சார்ந்து நடந்தவர் ஞானப்பெண்ணே. (க௯௦)

ஆயத் துறைதனி லேவல்செய் வோரி
லருண சலத்தைப் பலருந் துதிக்கிறார்
நியாயத் தவறொரு போதும் வாாமல்
நடத்துவ ராமடி ஞானப்பெண்ணே. (க௯க)

பருத்தித் துறையி லிருப்பவர் மாட்டின்ஸ்
பலகால மாயத் துறைவேலை யானவர்
வருத்தஞ்செய் யாமலே காலத்துக் கேற்ற
கழமைப் படிசெய்வார் ஞானப்பெண்ணே. (க௯௨)

வல்லுவெட் டித்துறை தன்னிலி ருந்தவர்
வாதைசெய் யாதம யில்லாக னம்பிள்ளை
நல்லம ஞுஷன்வி யாபாரி மாரை
நயப்பாய்ந டத்தினர் ஞானப்பெண்ணே (௧௯௩)

அவர்காலஞ் சென்றபி னந்தத்தொ ழிலுக்கு
ஆறுமு கம்மன்னர் ரேகிலி ருந்தவர்
துரையாகத் தானேதெ ரிந்துவைத் தார்நல்ல
தூய்மையு டையவர் ஞானப்பெண்ணே. (௧௯௪)

ஊர்கா வற்றுறை தன்னிலி ருந்தவ
ருபகாரி தானந்தச் சுப்பிர மணியருஞ்
சீராக விப்போ விருப்பவ ரைப்பல
பேர்குறை பேசுறர் ஞானப்பெண்ணே. (௧௯௫)

ஊரிற்ச னம்பலர் பேசுகி றார்ரேகில்
ஒருசனி யுண்டுபொல் லாதகுணம்
காரியத் தீர்வையில் வியாபாரி மாரைக்
கசற்றவைப் பாராமே ஞானப்பெண்ணே. (௧௯௬)

யாழ்ப்பாண ரேகிற்கொ டுமைய திகமாம்
வியாபாரி மாரிப்போ தங்கள்சா மான்களைத்
தீர்ப்பாக மற்றத்து றைமுகஞ் சேர்த்தத்
தீர்வைகொ டுக்கிறார் ஞானப்பெண்ணே. (௧௯௭)

எசன்று மற்றவர்த்து ரைமாரி தனை
யின்னும றியாதி ருப்பது நூதனம்
காரியா காரிய மிப்படி யெத்த
வூரில்ந டக்குதாம் ஞானப்பெண்ணே. (௧௯௮)

அந்நட யிக்குத்து ரைகால மிப்படி
அநியாயங் கிழுத்தி யோகர்செய் யாரடி
இந்தத்து ரைக்குவி யாபாரி மேலே
யிரக்கமு மில்லையோ ஞானப்பெண்ணே. (௧௯௯)

ஒவ்வொரு கந்தோர்முன் னுள்ளம னுஷரை
யொவ்வொரு பேராக வுற்றுநி னையடி
நல்லவர் பாலையில் வல்லவ ரல்லது
புல்லர்கி டையாது ஞானப்பெண்ணே. (௨00)

முன்பிசுக் கால்வேலை கொண்டது ரைமார்கள்
மோயாட்டு இல்மன்மொ றிஸ்மறையாம்
என்சொல்லு வேனந்தப் பேட்சுத்து ரைகூட
விருந்தார்பி சுக்காலாய் ஞானப்பெண்ணே. (௨௦௧)

நட்டுத்து ரையும்பட யிக்குத்து ரைபோல
மெட்டுகள் காட்டிச்சி லநாள்ந டந்தனர்
பட்டும்ப ருத்திக்கு முள்ளாந யங்குணம்
பார்த்தால்தெ ரியாதோ ஞானப்பெண்ணே. (௨௦௨)

இன்னும நேகது ரைமாரில் ஆருக்கு
எத்தனை யோநன்மை சித்தமாய்ச் செய்தனர்
அந்நாள்கள் போச்சுது இந்நாட்டு ழப்பத்தை
யார்தடுப் பார்சொல்லு ஞானப்பெண்ணே (௨௦௩)

புலிராச சிங்கமு தலியார் தம்பர்மேல்
பூட்டிவைத் தார்முன்னம் தோம்பக்க ணக்கெல்லாம்
பெரியம னுஷன்வெ குநாளவ் வேலையைப்
பேணிந டத்தினர் ஞானப்பெண்ணே. (௨௦௪)

சிறுப்புரொ குநாதர் மற்றுந்தொ ழிலாளர்
சிறந்தகு ணம்நற்கு லத்திற்பி றந்தவர்
மறந்தும்பி றன்கேடு செய்வார்க ளோநல்ல
மரபினி லுள்ளவர் ஞானப்பெண்ணே. (௨௦௫)

அம்பிகை பாகரி லையதம் பிமுத
லடுத்தகி ளாக்காயி ருந்தவர் யாவரும்
சங்கையா யுண்மைகெ டாமலெ வருக்குஞ்
சரியாய்ந டந்தார்கள் ஞானப்பெண்ணே. (௨௦௬)

நெற்கந்தோர் தன்னிலே யோசையைப் போலொரு
நேர்மையு டையவ ராருமுண் டோசொல்லு
கற்பனை யானக தையன்றி வீண்கதை
கனவிலும் பேசாரே ஞானப்பெண்ணே. (௨௦௭)

பிசுக்காற் கந்தோர்மு தலிமா ரில்மெத்தப்
பெரியம னுஷன்தான் கோமிச வென்பவர்
பசுப்போல மெத்தப்ப தமைது டிகள்மேற்
பட்சம திகந்தான் ஞானப்பெண்ணே. (௨௦௮)

ஆராய்ச்சி தம்பு வேலைவெ குசோலி
அந்தமாய்ப் பார்த்தவர் பெண்சனும் பெற்றனர்
பார்மீயப் போதுள்ள சேவுக ரெல்லாம்
படைவீரர் போலடி ஞானப்பெண்ணே. (உ0௯)

ஆர்வலன் யோசேப்பு ரேகில்சி ருப்பு
அருமையு டையவர் நல்லம னுஷன்தான்
காரிய மாருக்குங் கேடுகள் செய்த
கதையும றிவாயோ ஞானப்பெண்ணே. (உ௧0)

சின்னம னிதர்க்கு உத்தியோ கம்வந்தால்
சீர்கெட்ட வானரங் காஞ்சொறி வீழ்ந்தாற்போல்
தண்ணளி யானகு ணஞ்சிறி தில்லாமற்
றுன்மெட்டுக் காட்டுவார் ஞானப்பெண்ணே. (உ௧௧)

சொர்னத்தி ஞற்பல பூஷணம் பூட்டிச்
சுவானத்தைத் தண்டிகை மேல்வைத்துக் காவினுஞ்
சின்னக்கு ணம்போமோ நாய்களைக் கண்டாற்
சீறிக்கு லைக்குமாம் ஞானப்பெண்ணே. (உ௧உ)

---

கலித்துறை.

ஊர்வரு மானத்தைப் பெற்றுநம்
மூருக் குதவிசெய்த
பேர்பல ருண்டவர் நன்மையுந்
தீமையும் பெற்றியையும்
சீர்பெறக் கண்டவர் யாரெவ
ரென்னத் தெளிந்துவிந்தப்
பாரறி யும்படி செந்தமி
ழாகப் பகருவனே.

அரசுத லைநிலை யிட்டமு தலியா
ரன்பான மைந்தன்பேர் சந்தியாப் பிள்ளையும்
கரையூர்ம ணியமாய் நின்றுவெ குநாட்
கடமைசெய் தாரவர் ஞானப்பெண்ணே. (உ௧௩)

அந்தவ யித்திய லிங்கம ணியத்தை
யனைவருங் கண்டுகொண் டாடிந டந்தனர்
கந்தப்ப சேகர னென்னும ணியமுங்
கடுமைசெய் யாரடி ஞானப்பெண்ணே. (உகச)

மணியவே லைமுன்னே பார்த்தச னங்களில்
மாணிக்க வாசகர் பாஷைய றிந்தவர்
எவருக்கும் நல்லம னுஷனிவ் வூரில்
பலருக் குபகாரி ஞானப்பெண்ணே. (உகரு)

ஏழைகட் குத்தம்மாற் கூடிய மாத்திர
மிடுக்கண்வ ராமலு தவிப லசெய்தார்
ஆருக்கும் நல்லது னைசெய்ய வெண்ணமு
மாசையு டையவர் ஞானப்பெண்ணே. (உகசா)

வண்ணார் பண்ணைகி ழக்குப்ப குதிக்கு
வந்தஉ டையார்ப லராம வர்களிற்
கந்தஉ டையார்கு ணவானென் றவார்த்தை
காதாரக் கேட்டோமே ஞானப்பெண்ணே. (உகஎ)

உடையார் மார்களில் வீரவா கென்பவ
ருபகாரி யூருக்கு கந்தகுணம்
கொடையாளி தான்மற்ற வீரவா குமவர்
குணத்தைய றிவாயோ ஞானப்பெண்ணே. (உகஅ)

விசுவாசம் பத்திசி றந்தவர் தானந்த
விசுவநா தஉடை யாரென்று சொல்பவர்
அநியாய மாகத்தன் பொன்னையும் பெண்ணையு
மலையவைத் தாராமே ஞானப்பெண்ணே. (உககூ)

சாமிநா தாக்தச் சுப்பிர மணியரும்
தகுந்த விதானையார் முன்னேயி ருந்தவர்
ஆருக்கு மஞ்சார்க ளெதிர்க வாதி
யடக்கிவைப் பாரடி ஞானப்பெண்ணே. (உஉ0)

பின்னுக வந்தவி தானைமார் யாரிலும்
பேறுக திரித் தம்பிர டைகள்தான்
நன்னய நல்லேகு ணவான்த மிழிலே
நாவல ருமடி ஞானப்பெண்ணே. (உஉக)

இப்போ திருக்கும்மி தானைமா ரெல்லா
மிடுக்கஞ்செய் வோர்க்குப்ப யந்துந டக்கிறார்
அப்போக லாதிய டங்குமோ விந்த
வரசவொ ழுங்கிது ஞானப்பெண்ணே. (உஉஉ)

கொடுமைகண் டாலூரில் தலைமைச்ச மூகம்போய்க்
கூடவென்று கத்தியே துன்பங்க ளாறுவர்
கெடுதிகள் வந்தாலு மிப்போது போய்ச்சொல்லக்
கேட்பாரில் லையடி ஞானப்பெண்ணே. (உஉங)

ஆரிடஞ் சொன்னாலுங் கோட்டுக்குப் போவென்ப
ரையோப ணமில்லா னென்னதான் செய்குவன்
ஊரிற்பி ரபுத லைமையா ருக்கெல்லா
முள்ளன்பு மில்லையோ ஞானப்பெண்ணே. (உஉச)

தரணியி டம்போனாற் காசைக்கொண் டாவென்பர்
சற்றுநாள் பின்னப்புக் காத்தும்வேண் டுமென்பர்
ஈனையாத பஞ்சுசு மக்கமாட் டாதவர்
ஈனத்துஞ்சு மப்பாரோ ஞானப்பெண்ணே. (உஉ௫)

உள்ளன்பி லாமலே தித்திக்கப் பேசி
யுறிஞ்சுவா ருள்ளப ணத்தையெல்லாம்
கள்ளம ணமுங்க படமுந் தானிப்போ
கண்கண்ட காரியம் ஞானப்பெண்ணே. (உஉசு)

இக்காலத் துரைமாரும் மற்றுத்தி யோகரு
மேழைக்கு டிகட்குச் செய்துந யங்களைப்
பின்னால்வ ரும்மற்ற இரண்டாம்ப திப்புப்
பேசக்கே ளடி ஞானப்பெண்ணே. (உஉஎ)

---

## விருத்தம்.

நல்லதுரை மாராசு காலம் போச்சு
நாடுநகர் தனிலிருந்த நன்மை போச்சு
பொல்லாத கொடியருக்கே கால மாச்சு
பொருள்பண்ட முடையோரை நகைக்க லாச்சு
இல்லாத பொய்புரளி யதிக மாச்சு
ஏருழவு வேளாண்மை யிடும்பை யாச்சு
மன்னவனுங் குடிசனத்தை மசகம் போல
மதித்திட்டான் கடைவரியை விதித்திட் டானே.

நல்லதண் ணீர்குளம் நீர்நிறைந் தாற்போல
நன்மைசெய் ததுரை காலங்கள் போச்சுது
பொல்லாத எட்டிஊர் நடுவேப ழுத்தாற்போ
லெல்லாம்வி ஷமாச்சு ஞானப்பெண்ணே. (௨௨௮)

துரைகட்ட ளையோவி தானமார் புத்தியோ
தொந்தரை மெத்தக்க டைகளி லேயிப்போ
எளியச னங்கள்வ யிறுவ ளர்ப்பது
எப்படி நீசொல்லு ஞானப்பெண்ணே. (௨௨௯)

வண்ணைவி தானமார் நல்லம னுஷர்கள்
வாதைசெய் யார்மெத்த ஏழைச்ச னங்களை
என்னசொல் வேனந்தச் சுன்னாகச் சந்தை
யிழுப்புப்ப றிப்பாமே ஞானப்பெண்ணே. (௨௩௦)

பூனைதன் குட்டியைக் காவினாற் போலவே
போறதும் வாறதும் சுன்னாகச் சந்தையாம்
நியாயம றிந்தது ரைமெய்கள் பூமியை
யாளுற லக்ஷணம் ஞானப்பெண்ணே. (௨௩௧)

ஊரிற்ச னங்கட்கு முத்தியோ கர்க்கு
மொவ்வொரு நாளுங்க லாதிக்கி டமாச்சு
ஆதிதொட் டில்லாவ ழமைபு திதா
யமைக்கவி தியென்ன ஞானப்பெண்ணே. (௨௩௨)

சந்தைக டைகளிற் கொள்பவர் விற்பவர்
தகுந்தவ ரோவல்ல ஏழைதொ ழிலென்று
முந்தியி ருந்தது ரைமார வற்கேற்ற
முயற்சிக்கி டஞ்செய்தார் ஞானப்பெண்ணே. (௨௩௩)

குச்சுகள் கட்டியே சோனகக் குட்டிகள்
கொஞ்சச்ச ரக்குநூல் ஊசிகள் விற்பார்கள்
இச்சையாய் வாடைத ரத்தக்க லாப
மிருக்குதோ பாரடி ஞானப்பெண்ணே. (௨௩௪)

தோட்டந்து ரவிலே காய்த்தபிஞ் சுபூவைத்
தொடுபதந் தின்னஅ ரிசிக்காய் மாறுவர்
மாட்டியி ழுத்திவர் வாடைப றிப்பது
மரியாதை யோசொல்லு ஞானப்பெண்ணே. (௨௩௫)

கீரைகள் விற்கிற பெண்களின் கைமுதல்
கெட்டியா யாரும றிவாரொ ருபணம்
ஆரைய றுத்தவர் வாடைகொ டுப்பது
வரியாய மல்லவோ ஞானப்பெண்ணே. (௨௩௬)

படியால ரிசிகள் விற்கிற பெண்கள்
பணக்கார ரோவல்ல ஏழைச்ச னங்கள்தான்
துடியாகப் போயிவர் காசிலே கைவைத்தா
லிடியாளோ கொத்தாலே ஞானப்பெண்ணே. (௨௩௭)

நெல்லும ரிசியும் விற்கிற பேதையை
நெருங்கியி வர்கள்வா தாடுஞ்ச மயத்தில்
பல்லுப்ப றக்கவி டித்தக தையையுஞ்
சொல்லிச்சி ரிக்கிறார் ஞானப்பெண்ணே. (௨௩௮)

மல்லாகக் கோட்டுவ ழக்குக்கென் செய்வார்கள்
மானம்வ யிறுவ ளர்க்கவென் செய்வார்கள்
பொல்லாத்த லைமைகொ டுமையிந் நாட்களில்
நல்லாய்த்தெ ரியுது ஞானப்பெண்ணே. (௨௩௯)

கடையில்வ ரியைக்க வன்சலிற் பேசியே
கட்டளை யொன்று பெற்றுத்த ரும்படி
துரையுமிப் போதுக வர்னரி டத்திலே
தாண்டுரு ராமடி ஞானப்பெண்ணே. (௨௪௦)

அவ்வாறு கட்டளை பெற்றுக்கொண் டார்பின்ன
ராரைவி டுவார்க ளந்தத்த லைமைமார்
சும்மா உழுகிற பன்றிக்குச் சாண்கொழு
நல்லாயி ருக்காதோ ஞானப்பெண்ணே. (௨௪௧)

அடிமேல டிக்கெந்த அம்மிந கராது
அரசர்கொ டுமைகு டிகள்ச கிக்காது
மிடியொரு பக்கங்க டமையொ ருபக்கம்
வேதனை செய்யுதே ஞானப்பெண்ணே. (௨௪௨)

கண்டப டிசனம் வெட்டிப்பி ழைத்த
காட்டுவி றகுக்குக் கந்தோரும் வைத்துப்
பூட்டுந்தி ராசுப டிகளும் பாவித்துப்
பொன்போல்நி றுக்கிறார் ஞானப்பெண்ணே. (௨௪௩)

அந்தர்க்கி ரண்டுப ணம்வாங்கி வந்தனை
ரப்பால்உ ரவா நாலைந்தாய்ப் போச்சுது
சொந்தமாய்க் காய்ச்சங்க றிசோறு மெத்தச்
சுணங்குதே யென்செய்வோம் ஞானப்பெண்ணே. ( )

விறகென்று வந்தாலு டனேகொ டுக்காராம்
விதானைமார் கையிலி றிப்போட்டு வேண்டுமாம்
அதுவும்பொ ழுதுபோய் நாலும ணிக்காகு
லார்பசி கிற்குஞ்சொல் ஞானப்பெண்ணே. (௨௪௫)

சோற்றுக்கு ழைக்கமு டியாத பேருக்குத்
தொந்தரை மெத்தவி றுக்காய் வந்தது
காற்றுமெ ருப்புத்தண் ணீருக்கெ லாமினிக்
கடமைவி திப்பாரோ ஞானப்பெண்ணே. (௨௪௬)

கஞ்சல்கு ழைவெட்ட இரண்டரை ரூபா
கடமைவி தித்துந டத்துகிறார்
அஞ்சிந டக்குங் குடிகளுக் குஇந்த
ஆதர வேபோதும் ஞானப்பெண்ணே. (௨௪௭)

மாடாடுதி ன்னுங்கு ழைக்குவ ரிவைக்க
மனுநீதி நூலிலுங் கண்டதுண்டோ
போரான மன்னர்சி றந்தசெங் கோலின்
பெருமையுங் கண்டாயோ ஞானப்பெண்ணே. (௨௪௮)

தளர்ந்தந ரைத்துவ யதுசென் றாலுந்
தலைவரி யால்முன்னே தள்ளாது வைத்தனர்
எழுந்தகு ழப்பத்தைக் கண்டுப லபேரை
யேலேக ழித்தாராம் ஞானப்பெண்ணே. (௨௪௯)

காடெல்லாம் வெட்டிவெ றுநில மாக்கினர்
கமக்காரர் மாட்டையுங் கட்டிம றித்தனர்
பாடுகள் மெத்தக்கு டிசன மிங்கே
படவிதி யோசொல்லு ஞானப்பெண்ணே. (௨௫௦)

ஜூபிலி யாலாறு பாலர்ம டிந்தனர்
துரைத்தனஞ் சின்னக்க டைவீழ்ந்துஞ் செத்தனர்
பாவமிவ் வூரிற்கு டிசனம் பெற்ற
பலன்போதும் நீபோடி ஞானப்பெண்ணே. (௨௫௧)

கோடுபு திதாய்த்தி ருத்துமி டத்துக்
கொலைகாயத் துன்பங்கள் மெத்தந டந்தது
தீரத்தி ருத்திமு டியமுன் னெத்தனை
சேதம்சீ சொல்லடி ஞானப்பெண்ணே. (௨௫௨)

முன்னேப டித்தஅ றிவுடை யோரை
முதலோவ சியாய் வைத்து டத்துவர்
பின்னேவ ரவரக் காசைச்சு ருக்கிப்
பெரும்பிழை செய்கிறார் ஞானப்பெண்ணே. (௨௫௩)

அந்தக்க வர்ண்மேந்தின் காசையெ டுத்து
அனேகவி லைக்குநி லங்களை வாங்கியே
இந்தத்து லுக்கர்க்குக் கக்கூசத் தோட்டமா
யென்கொடுத் தார்துரை ஞானப்பெண்ணே. (௨௫௪)

பள்ளர்பி ரேதம டக்கவி டாமற்
பழுதுக ரையாரே செய்தத றிந்தும்
என்னவொ ழுங்கிவர் செய்துகொ டுத்தா
ரிதுமுறை தானோடி ஞானப்பெண்ணே. (௨௫௫)

எங்கள்பெ ருந்தகை றுவைனந்து னைமேலே
யெத்தனை யோகுற்றம் ஊரவர் தீட்டியே
சங்கைபெற் றசீமைக் கவுன்சலன் பார்த்துத்
தான்தெரி வித்தாராம் ஞானப்பெண்ணே. (௨௫௬)

இந்தவி பரங்கள் கண்டந்தக் கூட்டத்தா
ரேசன்றைப் பார்த்துநி யாயங்கள் சொல்லென்று
இங்கேய னுப்பது வருஞ்சி லது
எழுதியி ருக்குதாம் ஞானப்பெண்ணே. (௨௫௭)

சின்னத்து ரையையும் மேல்வீட்டிற் கூப்பிட்டுச்
சிறந்தபுத்தி பண்ணி நியாயமெ ழுதினர்
என்னவெ ழுதிவி டுத்தாலு முண்மை
யெவருமறி வார்கள் ஞானப்பெண்ணே. (௨௫௮)

உழுதுவி ளைத்தவ ருதென்று லுமங்கே
யுள்ளப யிரைய ழிக்கக்கண்டால்
பழுதென்ற றிந்துபி டித்துஅ டைப்பது
பாரில்வ ழக்கந்தான் ஞானப்பெண்ணே. (௨௬௧)

சிலாபமு யற்சியி லிந்திர னுமடி
தேசமு றைதிருத ராட்டிரன் போலடி
சாலந யங்கவர்ண் மேந்துக்கி ருந்தாலுஞ்
சிலம்வி ரும்புவார் ஞானப்பெண்ணே. (௨௯0)

ஊரையு லைமூடி யால்மூட லாகுமோ
யுண்மையை யாரும்ம றைக்கமு டியுமோ
பாராளும் மன்னர்கு றைநிறை யெல்லாம்
பரன்செய லல்லவோ ஞானப்பெண்ணே. (௨௯௧)

பெற்றபி தாப்போல ராஜனு மெம்மைப்
பேணிவ ளர்க்கவி திகளுண்டு
எப்படிச் செய்தாலுஞ் செய்யட்டு மேழைநா
மென்னசெய் வோஞ்சொல்லு ஞானப்பெண்ணே. ()

நலிதல்செய் யாமற்கு டிகளின் மேலன்பு
நாளும்வ ளர்ப்பவ னேதுரையாம்
புலியின்பே ரைப்பூனை சூடினின் றாலது
புழுத்துச்சா குமடி ஞானப்பெண்ணே. (௨௯௩)

கோனலித்து ரையிங்கே நீதவா னானது
குடிசனங் கள்செய்த புண்ணியந் தானென்று
பெரியோர்மு தலாக வெத்திறத் தோர்களும்
பேசநாங் கேட்டோமே ஞானப்பெண்ணே. (௨௯௪)

எந்தநே ரத்திலும் புத்தியா லோசனை
எப்போதுங் கோட்டுவ ழக்கிலே சிந்தனை
இந்தக்க ருத்தன்றி வேறுமு யற்சி
யிவரிலே கண்டாயோ ஞானப்பெண்ணே. (௨௯௫)

கட்டளைச் சட்டமு றைதவ றாமலும்
காரிய வுண்மைவி ரோதம்வ ராமலும்
திட்டமாய்க் கூடிய வாலோச னைபண்ணித்
தீராய்ந டத்துறார் ஞானப்பெண்ணே. (௨௯௬)

சத்தமா யெந்தவ ழக்கிலும் பின்னாலே
சோலிகள் வாராமற் றீர்வையெ ழுதுவார்
சித்தமாய்க் கோட்டினி லேவல்செய் வோரெல்லாம்
மெத்தவி யக்கிறார் ஞானப்பெண்ணே. (௨௯௭)

மற்றுந்தொ ழிலாள ரோரிற்பி ரபுக்கள்
மானம்ம ரியாதை மெத்தஅ வரிலே
உத்தம மிப்போது லோலைபி றேறியும்
வைத்துவ ழங்கிறார் ஞானப்பெண்ணே. (௨௬௮)

அன்னாளி ருந்தது ரைமாரைப் போலவே
அன்புகு டிகளில் ரொம்பவுண்டு
என்னேர முமிங்கே நீதவா னாக
இருக்கச் சேனடி ஞானப்பெண்ணே. (௨௬௯)

## வெண்பா.

உடைப்பெருஞ் செல்வருஞ் சான்றோருங் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீளும் பெருகிக்
கடைக்கா றலைக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கு முலகு.

---

கலியுக காலக்கொ டுமைவ ருமென்று
கையிற்க னிபோலச் சொன்னார்மு னிவர்கள்
பலவிதத் தாலும திகப டுது
வருகுது பாரடி ஞானப்பெண்ணே. (௨௭0)

தெய்வவ ழிபாடு மெத்தக்கு றையுது
தேசங்க ளெங்கும் பொய்தானு லாவுது
நல்லவர் பூஷணங் கல்வியொ ழுக்கம்
நடுந்தி குன்றுது ஞானப்பெண்ணே. (௨௭௧)

கீழ்சாதி யாகிய வேசிம யக்கத்தைக்
கீர்த்தியாய் நல்லவர் கொண்டாடு றாரிப்போ
மேல்சாதி யாகிய வேதியர் தத்தம்
விதியால்வி லகிறார் ஞானப்பெண்ணே. (௨௭௨)

தானத ருமங்கள் மெத்தக்கு றையுது
சண்டைகு ழப்பம்வ ரவரக் கூடுது
ஆனம னுஷர்கள் வார்த்தைக ளெல்லா
மலட்சிய மாகுது ஞானப்பெண்ணே. (௨௭௩)

கள்ளிலுஞ் சூதிலும் வேசிகள் வீட்டிலும்
காசுக ளோடியொ ளித்துஇ ருக்குது
கிள்ளிக்கொ டுக்கிற பிச்சையு மிங்கே
கிடையாது போலினி ஞானப்பெண்ணே. (௨௭௪)

முன்செல்வ மில்லாதார் பெற்றபொ ருள்களை
முன்னோர்கள் பாட்டிலு வமையாய்ச் சொற்றனர்
என்சொல்வே னிந்நாட்டு துப்பணக் கார
ரிறுமாப்புங் கண்டாயோ ஞானப்பெண்ணே. (௨௭௫)

நம்பிக்கை யெங்கேதா னுண்மையொ ழியெங்கே
நியாயவொ ழுங்கெல்லா மெங்கேயொ ளித்தது
உம்பரொ ழுக்கமும் பம்பரம் போலே
சுழலுவ தேனடி ஞானப்பெண்ணே. (௨௭௬)

புத்தியு டையவர் தான்மார்க்க வேசிக்குப்
பொருள்களை யெல்லாங்கொ டுத்துஅ லைகிறார்
பத்தியு டையவர் ஊரிலு லாவப்
பயந்தொ ளிக்கிறார் ஞானப்பெண்ணே. (௨௭௭)

முன்னாளிற் காமுகர் தூர்த்தர்வி டர்களை
மூடர்க ளென்றுபெ ரியோர்ம தியார்கள்
இந்நாளிற் கெட்டகு ணமுடை யோருக்கே
சிறப்பும ரியாதை ஞானப்பெண்ணே. (௨௭௮)

தடியடி காரர்க்குச் சங்கைந டக்குது
சற்குண முள்ளோர்க்குப் பங்கம்வ ருகுது
அடிபிடி சன்றச்சு றட்டல்ல வாலூரி
லமைதிகி டையாது ஞானப்பெண்ணே. (௨௭௯)

வித்துவே ஷத்தைப்ப லருமுண் டாக்கிறார்
வேதவொ ழுங்கைப்பி ழையென்று தள்ளுறார்
எத்தங்க ளாவுங்கொ லைபுலை காமந்தா
னெங்கும்ந டக்குது ஞானப்பெண்ணே. (௨௭௦)

தெய்வத லத்தைம தியாம லேமெத்தச்
சீர்கேடா யூரிற்க லாதிந டக்குது
ஐயாகு லங்குணஞ் சாதியொ ழுங்கு
அடிதலை மாறுது ஞானப்பெண்ணே. (௨௮௧)

வண்ணைச்சி வன்கோயில் மானேசர் முன்னாளில்
வழமைபோற் பூசைதி ருவிழாச் செய்தனர்
என்னவி தமிப்போ கோயில்நிர் வாக
மெல்லாரும் மானேசர் ஞானப்பெண்ணே. (௨௮௨)

மெய்காவற் காரரி னிமேலொ ருவேளை
மேலான கோயில திகாரி யாவர்கள்
மைபூசுங் கற்சிற்ப ரிப்போது நல்ல
மானேச ராய்விட்டார் ஞானப்பெண்ணே. (௨௮௩)

கோயில்நி லத்திலே புண்ணிய வான்கள்
குடியாயி ருக்கிறார் வாடைகொ டார்களாம்
மானேச னைக்கொண்டு குத்தகைச் சீட்டு
மனம்போ லெழுதிப்பார் ஞானப்பெண்ணே. (௨௮௪)

ஏழைக ளாகிய பெண்பேதை கட்கு
இடறுகள் செய்துகு டியைக்க லைப்பார்கள்
வாளல்லவோஅவர் கண்ணீர்கெ டுத்தெவர்
வாழ்ந்தார்நீ சொல்லடி ஞானப்பெண்ணே. (௨௮௫)

ஆற்றங்க ரையிற்பெ ரியவர் போலவே
யங்கேயொ ருவர்க ணகாலங் கண்டவர்
வேற்றுமை பாராம லந்தக்கு டும்பத்தை
வேரோட றுத்தாராம் ஞானப்பெண்ணே. (௨௮௬)

பரிதாபஞ் சொன்னால்ம னதுச கிக்காது
பாவம வர்க்குத்த யிர்சாத மாச்சுது
ஒருகூடு கோழியைத் தின்றவெ ருகுபோல்
திருவூல மாக்கினார் ஞானப்பெண்ணே. (௨௮௭)

ஆசிகள் பெற்றுமுன் வாழ்ந்தகு டியது
அந்தோவ வர்கள்த லைவிதி யோவிது
வாசிகை வாசலை யாரறி வார்சுயம்
பாகிய றிவாரே ஞானப்பெண்ணே. (௨௮௮)

குடிகாரர் கூட்டமும் வம்புங்க லாதியும்
கொஞ்சமுந் தீராத கேலியுஞ் சோலியும்
வடிவாயெ வர்க்குந்தெ ரியச்சி வசொத்தை
வம்பாய்க்கெ டுக்கிறார் ஞானப்பெண்ணே. (௨௮௯)

கோளர்சி லரால்மா னேசரி ருவரும்
குழம்பியெ திரித்த னங்கள்செ லுத்துறார்
ஊரான துரெண்டு பட்டாற்கூத் தாடிக்
குகப்பல்ல வோசொல்லு ஞானப்பெண்ணே. (௨௯௦)

வண்டர்கொ டுமைகள் சொல்லமு டியாது
வஞ்சனை யில்லாத செல்லப்ப செட்டிக்குக்
கண்டச னமஞ்ச அஞ்சாம லேதலை
மண்டையு டைத்தாரே ஞானப்பெண்ணே. (௨௯௧)

போலிப்பி ரபுக்கள் சொற்பகா சைக்கொண்டு
புழுகிச்ச னங்களை மெத்தவு லைக்கிறார்
ஆனமெவா ழுங்குசி றிதுமில் லாம
லலையுது லகடி ஞானப்பெண்ணே. (௨௯௨)

தெருக்களி லேவருஞ் சண்டையைப் போலவே
தெய்வத லத்திலுஞ் சண்டைந டக்குது
குருக்கள்மு தலாய்ப்பி ராமணப் பிள்ளைமார்
குணங்கள றிந்தாயோ ஞானப்பெண்ணே. (௨௯௩)

வீடுபெ றும்வழி காட்டும்பி ராமணர்
வித்தைய றிந்தவர் மெத்தப்ப ழுதானோர்
நாடுந கரச்சி றட்பைய றுபடி
நான்பாடட் டோசொல்லு ஞானப்பெண்ணே. (௨.௯௪)

இப்படி யாகிய துட்டரு டனிருந்
தெப்படிக் காலங்க ழிப்போமடி
ஒப்புர வில்லாதா னூரைவிட் டுநாங்க
ளோடுவோ மோசொல்லு ஞானப்பெண்ணே. (௨௯௫)

ஆசைமி குதியா லூரைவ தைத்து
அடிக்கடி மெத்தவ நியாயஞ் செய்கிறார்
தேசவ திபதிக் கிந்தவ ரலாறு
தெரிவிப்போ மோசொல்லு ஞானப்பெண்ணே. ( )

இல்லாளை நம்பாமல் வேசியை நம்புறார்
இராசனு மேழைக்கு டிசொல்லை நம்பானும்
பொல்லாத காலமா யூரெங்குங் கேடுதான்
பொங்கிவ ழியுது ஞானப்பெண்ணே. (௨௯௭)

வாடும்ப யிர்க்கும ழைவந்த துபோல
வந்தாரிங் கேயந்த ராமநா தத்துரை
ஆருமதி யாநம் மூர்செய்த மேன்மையு
மன்மையுங் கேளடி ஞானப்பெண்ணே. (உகஅ)

## விருத்தம்.

சீர்பெருகு யாழ்ப்பாண தேசமும் புகைரதஞ்
செல்லவருள் செயதினைந்து
தேசவதி பதிசெய்த வாஞ்ஞைதவ ருமலூர்ச்
சிறப்பையுங் காண வெண்ணி
தாரணியு மணிமார்பன் ராமநா தத்துரையுஞ்
சம்சாரி யாக வந்து
தங்குடித் தமர்மற்ற விஷ்டர்முத லோர்க்கெலாந்
தயாவிருத் திகள்பு ரிந்து
ஊரிலுறை யேழையெளி யோர்குறையெ லாமறிந்
துண்மைசிவ மூர்த்த முள்ள
வுயர்தலமெ லாஞ்சென் றிறைஞ்சியே சிவஞான
மோதுசா லையைவி யந்து
பாரிலுறை நால்வருண சாதிமுறை சைசவபரி
பாலனமொ ழுங்கு செய்து
பண்புடன் றம்முனோ ரன்புபோ லுள்ளன்பு
பரிசுகொண் டாடின ரோ.

---

இராமநா தத்துரை வந்துசேர்ந் தாரிங்கு
ளத்திறத் தோர்களும் சித்தம கிழ்ந்தனர்
போனச னங்களுக் கேற்றவி தமவர்
போற்றிந டத்தினார் ஞானப்பெண்ணே. (உகக)

வேதமு றைதிவ ஞானமு ணர்ந்தநல்
வேதியர் சோதிட ரின்னும்ப லபல
சாலக லாவிடக் கூட்டங்கூட் டமாகச்
சந்திக்க வந்தனர் ஞானப்பெண்ணே. (௩00)

கோயில்மா னேசரும் மேளதா ளமுடன்
கூடிப்போய் நல்லம ரியாதை செய்தனர்
ஆர்வமு டன்துரை லோயர்மு தலா
யனைவரும் போய்க்கண்டார் ஞானப்பெண்ணே. ()

கோவைக்கு ருமாரும் மற்றும்பி றதரும்
குணமான வாத விற்றனி வருடன்
சாலவி ருப்பமாய் வந்துகண் டுமெத்தச்
சந்தோஷங் கொண்டார்கள் ஞானப்பெண்ணே. ()

அறிவின்மி குத்தபு லவர்பி ரபுக்க
ளங்கங்கே யுள்ளவே ளாளர்மு தலாக
வறிஞர்க ரைச்சிகண் டாவலை யூராரும்
வந்துகண் டாரடி ஞானப்பெண்ணே. (௱௩)

வன்னிப்ப குதியி லுள்ளச னங்களும்
வாரமு டனங்கு வந்துவ ணங்கியே
அந்நிய னைத்து ரைதமக் குச்செய்த
வநியாயஞ் சொன்னார்கள் ஞானப்பெண்ணே. (௱௪)

தீவிலி ருக்குஞ்ச னங்களு மற்றுஞ்
சிறப்பான நாட்டின்தி ரவிய வான்களும்
ளர்த்தொழில் செய்பவ ரசனல் வந்த
விடுக்கணு ரைத்தார்கள் ஞானப்பெண்ணே. (௱௫)

பூநக ரியந்தப் புறங்களி லேயுள்ள
பூவசி யர்பல பேர்களங் கேவந்து
காவல னைத்து ரைபோய்நெ ருக்கிய
கடுமையுஞ் சொன்னார்கள் ஞானப்பெண்ணே. (௱௬)

மூன்றாண்டு வேளாண்மை மோசம திந்தும்
மூர்க்கமு டனேக டமைப றித்தனர்
இந்நாளி லூர்படும் வேதனை கண்டு
பிரங்கான்து ரையென்றார் ஞானப்பெண்ணே. (௱௭)

கப்பலு மிங்கேவ ரத்துக்கி டையாது
காசுபு ழக்கங்க ளில்லாத லூரிது
இப்படி யானது ரைகீழி ருந்துநா
மென்னசெய் வோமென்றார் ஞானப்பெண்ணே. ()

ஆதிதொட் டிங்கேந டக்கும்வே ளாண்மை
யதிகரு றைவுசி றிதும்ப லனில்லை
பாதிம ழையின்றிற் பாதிய ரசன்றிற்
பழுதென்றுஞ் சொன்னார்கள் ஞானப்பெண்ணே. ()

ஆண்டுமு ழுவதுந் தோட்டங்கள் செய்து
அரசர்க்குப் பங்குகொ டுக்கமு டியாது
வேண்டாவெ றுப்புச்சி றுபோக முமென்று
வெகுளியாய்ஞ் சொன்னார்கள் ஞானப்பெண்ணே. ()

அரசனால் நாம்படும் வேதனை மாறாது
அன்றன்று காலங்க ழிக்கமு டியாது
மரவள்ளி தானிப்போ ஊரவர்க் கெல்லாம்
மானங்கொ டுக்குது ஞானப்பெண்ணே. (ரு.கக)

அதற்குமோர் வேளைக டமைவி திப்பாரென்
றஞ்சியே யல்லும்ப கலுங்க லங்குறோம்
எமக்காகி யவிதஞ் செய்துநீ ரெங்களை
இரட்சியு மென்றார்கள் ஞானப்பெண்ணே. (ரு.கஉ)

ஊருக்கூர் போயெங்குஞ் சந்தைக டைகளி
லுண்மைப ழுதுஅ றிந்துவந்தார்
பாரில்வே ளாளரும் வர்த்தக ருஞ்செய்யும்
பண்புமறிந்தனர் ஞானப்பெண்ணே. (ரு.கங)

சிங்கார மாயூரில் பந்தல்ச மைத்தெங்குஞ்
சீராய ழைத்துஉ பசரித்தார்
துங்கமு டையவே சன்றின்கு ணங்களுஞ்
சொல்லிய ழுதார்கள் ஞானப்பெண்ணே. (ரு.கச)

புலோலிப்ப குதியி லுள்ளபி ரபுக்கள்
பூச்சாங் கொண்டொரு பந்தல்ச மைத்தனர்
வருவழி யானசீ ராட்டுக ளெல்லாம்
நேராய்ந டத்தினர் ஞானப்பெண்ணே. (ரு.கரு)

சைவச மயிகள் வித்தியா சாலைக்குத்
தயாளமு டன்போய்ப ரீக்ஷைகள் செய்தனர்
தெய்வத லங்களுங் கண்டுவ ணங்கித்
தெரிசனம் பெற்றனர் ஞானப்பெண்ணே. (ரு.கசு)

இராமசா மிசிவன் கோயில்மா னேசரு
மின்பமு டனேய வரைய ழைத்துத்தன்
கோயில ருச்சனை பூசைவி திப்படி
குணமாய்ந டத்தினர் ஞானப்பெண்ணே. (௱௧௭)

கந்தசா மிகோயில் கந்தைய மானேசர்
கவனமு டன்சுக்ர வாரதி னத்தினில்
பங்கமாய் வேண்டும்ப ரிசுக ளெல்லாம்
பரிவுடன் செய்வித்தார் ஞானப்பெண்ணே. (௱௧௮)

உத்தம ரிங்கிலீசு வித்தியா சாலைக்
கொருநாள வரைவ ரும்படி வேண்டியே
மெத்தச்சி றப்பாய ழைத்துவந் தாரந்த
வேடிக்கை கேளடி ஞானப்பெண்ணே. (௱௧௯)

பேளதா ளம்முதற் பற்பல வாத்தியம்
வீதிக ளெங்கும திரத்தொ னித்தது
பூமியி லுள்ளபி ரபுக்க ளெல்லாம்
புடைசூழ்ந்து வந்தனர் ஞானப்பெண்ணே. (௱௨0)

ஆடல்பா டல்முத லானவி ளையாட்டு
அக்கினி கூடிய வாணவி ளையாட்டு
வேணமட் டுமந்த வீதிக ளிற்செய்து
விளையாடி னர்சிலர் ஞானப்பெண்ணே. (௱௨௧)

* * * (௱௨௨)

* * * (௱௨௩)

அத்துவக் காத்து நாகலிங் கபிள்ளை
அவசிய மூருக்கு வேண்டிய நன்மையைச்
சித்ர மாதிகவெல் லோரும ளக்கப்
புத்தியாய்ப் பேசினர் ஞானப்பெண்ணே. (௱௨௪)

இன்பம திகம்பு கைரத வீதியி
லெம்மூர்க்கு மந்தச்சு கம்வேண்டுமென்
றன்பாக நாலைந்து பிள்ளைகள் சேர்ந்து
சம்பாஷணைசெய்தார் ஞானப்பெண்ணே. (௯௨௫)

தம்புரு வீணைசு ரமண்ட லியுடன்
தாளமி ராகஞ்சு ருதிகள் மாறாமல்
தெய்வீக மாகக்கு ரவர்கள் செப்பிய
தேவாரம் பாடினர் ஞானப்பெண்ணே. (௯௨௬)

ஐயாவ ரசஞல் நாம்பெறும் நன்மையை
மெய்யாக நீர்தான்ந மக்காகப் பேசியே
செய்யாவி டிலிந்தத் தேசத்தில் நாமிருந்
துய்தல ரிதென்றார் ஞானப்பெண்ணே. (௯௨௭)

கொழும்புபோய்ச் சேர்ந்தவர் கூட்டங்க ளிற்பேசிக்
கொஞ்சவு பகாரஞ் செய்துதந்தார்
உழுந்துப யறுக டமைகொ டுக்கு
முரித்தைவி லக்கினர் ஞானப்பெண்ணே. (௯௨௮)

இன்னுமிவ் வூர்க்குந யந்தரு வாரென்று
மெங்குமொ ருகதை பொங்குது
அன்னையொப் பானபி ரதிநி தியன்றி
யார்செய்வார் சொல்லடி ஞானப்பெண்ணே. (௯௨௯)

* * * (௯௩0)

* * * (௯௩௧)

ஆண்டவன் நன்மையா லெங்களை யாளு
மரசனை சன்டும னதுக சிந்து
வேண்டும்ப ரிசுத ரப்பரன் பாதம்
விரும்பிக் கும்மி யடியுங்கடி. (௯௩௨)

நாடுவா ழிநகர் வாழிவா ழியெங்கும்
நல்லம ழைகள்சொ ரிந்துவாழி
கோடுகந் தோருள்ள உத்தியோ கரெல்லாங்
குறைபாடில் லாமலே வாழிவாழி. (௧௱௫)

பாராளு மன்னர்செங் கோல்வா ழிநல்ல
பக்ஷமுள் ளதுரை மார்வாழி
பேரான சைவப ரிபால னசபை
பெருமையா யென்நாளும் வாழிவாழி. (௧௱௬)

அத்துவக் காத்துவி ராமநா தத்துரை
அன்பான நம்மூர்ப்பி ரதிநிதி
நித்திய முஞ்செள பாக்கியம் பெற்று
நீடூழி காலம் வாழிவாழி. (௧௱௭)

நித்திய ஞானிய நித்தன ருள்வாழி
நீதிவ ழுவாமே வாளர்கு லம்வாழி
பத்திய மாயிந்த லக்ஷணக் கும்மியைப்
படிப்பவர் கேட்பவர் வாழிவாழி. (௧௱௮)

**குறிப்பு:** ௯௰௨, ௯௰௯, ௯௯௰, ௯௯௪-ம் கும்மிகள் முதற்பதிப்புப் பிரதியில் சிதைந்துவிட்டதால் அச்சிட முடியவில்லை.

முற்றிற்று.

---

சோதிடப்பிரகாசயந்திரசாலை, கொக்குவில். (1936.)

# சோதிடபரிபாலினி.

(மாதமிருமுறை பிரசுரிக்கப்படுவது.)

இது யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிட பரிபாலனமடத்திலிருந்து பிரபவஹு (17-4-27) முதல் வெளியிடப்பட்டுவரும் புதினப்பத்திரிகை யாகும்.

நிகழும் தாதுஹு சித்திரைமாதம் முதல் 10-வது ஆண்டு ஆரம்பமாகியிருக்கிறது.

இதில், ஒவ்வொரு நக்ஷத்திரத்திற் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு பக்ஷமும் நிகழும் கோசரபலன்கள் எழுதப்பட்டுவருகின்றன. உலக வர்த்தமானங்களும் இராஜீய, தேசீய விஷயங்களும்எழுதப்பட்டுவருவதோடு, தொடர்கதைகளும், இலக்கிய, சோதிட நூல்களும் இதில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டுவருகின்றன.

**இலங்கை இந்தியாவிற்கு வருடசந்தா ரூபா 2.**

(முற்பணமாகச் செலுத்தவேண்டியது.)

மானேஜர்,

சோதிடபரிபாலினி,

கொக்குவில், சிலோன்.